தினமணி

**அடையாளங்களை இழக்கும் கிராமங்கள்**

முகவை.க.சிவகுமார்

First Published : 27 Dec 2010 12:39:01 AM IST

நீண்ட இடைவெளிக்குப் பிறகு சொந்த ஊருக்குச் சென்றேன். ராமநாதபுரம் மாவட்டம் கமுதி அருகே நகரத்தார்குறிச்சி என்ற குக்கிராமம். சென்னையிலிருந்து மதுரை வழியாக கமுதி போகும் வழியில் முத்தனேந்தல் வாரச் சந்தை. பார்த்தவுடன் சந்தைக்குள் நுழைந்தேன். எனது பள்ளிப் பருவத்தில் கையிலிருக்கும் பாக்கெட் மணி 50 பைசா, ஒரு ரூபாய்க்கு ஏதாவது வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டே 6 கி.மீ. தூரத்தில் இருக்கும் கிராமத்துக்கு நடந்தே செல்வோம். வழிநெடுக சந்தைக்குச் செல்லும் மக்கள் எல்லாம் பைகள், ஓலைப்பெட்டிகள் நிறைய காய்கறி, மளிகைச் சாமான்களை வாங்கிக் கொண்டு நடந்தே வருவார்கள். இது வாராந்திர நிகழ்வு.

இப்பகுதியில் கார்த்திகை, மார்கழி மாதங்களில் வாரச்சந்தை கூடுகிறதென்றால் சந்தை களைகட்டும். கத்தரிக்காய், புடலங்காய், வெண்டைக்காய், பீர்க்கங்காய், பூசணிக்காய், அவரைக்காய், சுரைக்காய், பாவக்காய் என தோட்டத்துக் காய்கள் எல்லாம் மூட்டை மூட்டையாய் குவிந்திருக்கும். அத்தனையும் சுற்று வட்டாரக் கிராமங்களில் விளையும் காய்கறிகள்தான். சந்தையின் கூடுதல் சிறப்பு ராமேஸ்வரம் கருவாடு. இதனை வாங்குவதற்கென்றே ஒரு கூட்டம் இருக்கும்.

1980-85 களில் பெரும்பாலான காய்வகைகள் கிலோ ஒரு ரூபாய், 2 ரூபாய் என்றுதான் கூவிக்கூவி விற்பார்கள். இதில் வியாபாரிகளில் ஒருவருக்கொருவர் போட்டி வேறு. நேரம் ஆகஆக விலை குறையும். தரமும் குறையும்.

சந்தைக்குச் செல்வது அப்போதைய கிராம மக்களின் அன்றாட வேலைகளில் ஒன்றாக இருந்தது. கையில் பணம் இல்லாவிட்டால், வீட்டில் இருக்கும் நெல், நிலக்கடலை, பயறுவகைகள் உள்ளிட்ட ஏதேனும் ஒன்றை தேவைக்கேற்ப எடுத்துச் சென்று நகரங்களில் விற்றுவிட்டு ஒரு வாரத்துக்குத் தேவையான வீட்டுச் சாமான்களை வாங்கிவருவார்கள். கூலி வேலைக்குச் செல்வோருக்கு சந்தை நாள்தான் கூலி வாங்குகிற நாள். கிராமத்துச் சிறுவர்களுக்கோ தின்பண்டங்கள் கிடைக்கும் நாள்.

இவைகளை அசைபோட்டுக் கொண்டே சந்தையை வலம் வந்தேன். காய்கறிகள் மூட்டை மூட்டைகளாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த இடத்தில் கிலோ கணக்கில்தான் காய்கறிகளைக் குவித்துவைத்து கூவிக் கொண்டிருந்தனர். பத்து ரூபாய், இருபது ரூபாய் என வியாபாரிகள் கூவினர். விசாரித்தபோது அவையெல்லாம் கால் கிலோவின் விலை என்றனர். ஒரு கிலோ கத்தரிக்காய் | 80-க்கு விற்கப்பட்டது.

வழக்கமாகச் சென்னையில் பார்க்கும் பெங்களூர் தக்காளி, வெங்காயம், உருளைக் கிழங்கு, கேரட், பீட்ருட், முட்டைகோஸ் என மேற்கத்திய காய்கறிகளாகவே இருந்தன. ஒரு மணி நேரம் சந்தையைச் சுற்றியும் வெறுமைதான் மிஞ்சியது. பின்னர் சொந்த கிராமத்தைச் சென்றடைந்தேன்.

சிந்தனை சந்தையைப் பற்றியே சுற்றியது. 40 கிலோ கொண்ட ஒரு மூட்டை கத்தரிக்காய் | 20-க்கு விற்ற ஊரில் ஒரு கிலோ கத்தரிக்காய் 80 ரூபாயா? என்ன நடந்து விட்டது இந்த 25 ஆண்டுகளில். எங்கள் வீட்டில் ஏற்பட்ட மாற்றங்களே இதற்கு விடையாக அமைந்தன.

அப்பொழுது வீட்டில் 15 எருமை மாடுகள், 2 ஜோடி காளை மாடுகள், 2 பசு மாடுகள் இருந்தன. ஐம்பது ஆடுகள் இருந்தன. கோழிக் கூண்டைக் காலையில் திறந்து விட்டால் ஐம்பதுக்கும் மேற்பட்ட நாட்டுக் கோழிகள் வெளியே ஓடும். தினமும் 3 அல்லது 4 முட்டைகள் நிச்சயம் கிடைக்கும். ஆடிப்பெருக்கு என்றால் ஊரே கொண்டாட்டம்தான். அன்று பயிர் வைத்தால் விவசாயம் செழிக்கும் என்பது காலத்தை விஞ்சிய நம்பிக்கை. கிராமங்களில் ஒவ்வொரு குடும்பத்துக்கும் கொல்லைகள் என அழைக்கப்படும் தோட்டம் இருக்கும். எங்கள் வீட்டிலும் கொல்லை இருந்தது. ஆடிப்பெருக்கில் சுரை, அவரை, புடலை, கீரை என அனைத்து வகைக் காய்கறிகளுக்கும் விதை ஊன்றுவோம். முதலில் காய்க்கும் புடலங்காய், கடைசியில் காய்க்கும் பரங்கிக்காய் என புரட்டாசி முதல் தை மாதம் வரை 5 மாதங்களுக்கு காய்கறிக்குப் பஞ்சமே இருக்காது.

கோடைக்காலங்களில் நிலத்தைப் பண்படுத்த எருமைச் சாணமே உரமாகப் பயன்படுத்தப்பட்டது. பற்றாக்குறைக்கு ஆட்டுக்கிடை அமர்த்தல் மூலம் கூடுதல் உரம். ஆன்லைன் வர்த்தகம், பணவீக்கம், புதிய பொருளாதாரம் போன்றவை எல்லாம் எங்கள் கிராமத்தின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கவே இல்லை.

ஆனால், அதே இடத்தில் இன்று வேலிக்காத்தான் மரங்கள் வளர்ந்துள்ளன. முன்பு நகர மக்களுக்கு மட்டுமே தினசரி தேவையாக இருந்த காய்கறி இன்று கிராமத்தினருக்கும் அத்தியாவசியமாகிவிட்டது. எப்போதெல்லாம் பற்றாக்குறை ஏற்படுகிறதோ அப்போதெல்லாம் கத்தரிக்காய் | 80, வெங்காயம் | 100 மல்லிகைப் பூ | 1,200 என்பது இனி சர்வ சாதாரணமாகிவிடும்.

ஒரு ஜோடி காளைமாடுகளின் விலை சுமார் | 30 ஆயிரம். ஆனால் கிராமங்களில் மாடுகள் வளர்ப்பதென்பது அரிதாகிவிட்டது. வாங்கிய கடன் கையிலிருக்கும்வரை யூரியா, டி.ஏ.பி., பொட்டாஷ், பூச்சிக் கொல்லி மருந்துகள் என பயிர்களுக்குச் செலவழிக்கலாம். நாட்டுக்கோழி வளர்த்தால் வீடுகள் அசுத்தமாகிவிடும். அசைவத்திற்கு லக்கான் கோழிக்கறி வாங்கிக் கொள்ளலாம். காடு, கழனிகளில் உழைப்பதன் மூலம் கிடைக்கும் வருமானத்தைவிட திருப்பூர், கோவையில் கூலிவேலைக்குச் செல்வதன் மூலம் கிடைக்கும் வருவாய் அதிகம். பணத்தால் அனைத்தையும் வாங்கமுடியும் என்ற நம்பிக்கை. நகரத்தின் கலாசாரம் கிராமங்களை ஆக்கிரமித்துவிட்டது.

முன்பு பொழுது சாயும் காலத்தில் கிராமத்து தெரு, மைதானங்களில் கிளித்தட்டு, கபடி, சடுகுடு, சிலம்பாட்டம், ஆடுபுலியாட்டம், பல்லாங்குழி, கும்மி, சதுரங்கம் என அவரவர் வயதுக்கு ஏற்ப இரவு வரை விளையாடுவார்கள்.

தற்போது உறவினர் வீடுகளுக்கு நலம் விசாரிக்க இரவு 7 மணியளவில் சென்றால் தெருக்களில் ஆள் நடமாட்டம் இல்லை. கதவுகள் சாத்தப்பட்டிருந்தன. ஆனால் வீட்டுக்குள் சப்தம் கேட்கிறது. மெதுவாகத் திறந்து பார்த்தேன். பக்கத்து வீடு, அடுத்த வீடு என அனைவரும் தொலைக்காட்சித் தொடர்களில் மூழ்கி இருந்தனர். என்னைக் கண்டதும் இரண்டொரு வார்த்தைகள் பேசினார்கள். சில நொடிகளில் மீண்டும் சீரியல் சீரியஸ்ýக்குச் சென்றுவிட்டனர். வெறுமையோடு வீடு திரும்பினேன். மனதில் பல்வேறு கேள்விகள். எப்படி இருந்த கிராமம், இப்படிச் சீரழிந்து போய்விட்டதே என்று.

ஆற்றங்கரைகளில் தொடங்கி பல நூற்றாண்டுகளாய் தொடர்ந்த இந்த கிராம நாகரிகம் என்பது வாழ்க்கைமுறை மட்டுமல்ல. இவை மனித வாழ்வியலின் அடையாளங்கள்.

மது, புகையிலை பயன்படுத்தும் பழக்கங்கள், தொலைக் காட்சித் தொடர்கள், கேலிக் கூத்தாகும் கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டங்கள், கடன் வாங்க அசராத மனப்பான்மை, வாக்களிக்கப் பணம் பெறுவது எப்படி என கிராமங்கள் திசை மாறிவிட்டன. இதன் எதிர்கால நிலைமை என்ன? கடனில் மூழ்கும் கிராமங்களை மீட்க முடியுமா, சந்தேகம்தான். ஆனால் முடிவு ஒன்று நிச்சயம் வரும், மாற்றம் ஒன்றே மாறாதது!

**மீன் வளத்தில் மகாராஷ்டிரம் பின்தங்குகிறதே? சரத் பவார் கவலை**

First Published : 27 Dec 2010 03:44:09 AM IST

மும்பை,டிச.26: மீன்வளத்தில் மகாராஷ்டிர மாநிலம் மிகவும் பின்தங்கிவிட்டதே என்று மத்திய வேளாண் அமைச்சர் சரத் பவார் கவலை தெரிவித்தார்.

தேசியவாத காங்கிரஸ் கட்சித் தலைவரான அவர் மகாராஷ்டிரத்தின் முன்னாள் முதலமைச்சர் என்பது குறிப்பிடத்தக்கது.

பாந்த்ரா - குர்லா வணிகவளாகத்தில் தேசிய மீன் திருவிழாவை ஞாயிற்றுக்கிழமை தொடங்கிவைத்துப் பேசிய பவார் மண்ணின் மைந்தர் என்ற வகையில் மகாராஷ்டிரத்தின் நிலைமை குறித்து ஆதங்கத்துடன் பேசினார்.

மீன்வளத்தில் தேசிய சராசரி 6% என்றும் மேற்கு வங்கம், குஜராத், ஆந்திரம், கேரளம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் இந்த சராசரியைக் காட்டிலும் அதிக வளர்ச்சி பெற்றிருப்பதாகவும் சுட்டிக்காட்டிய பவார், மகாராஷ்டிரத்தில் மட்டும் இந்த வளர்ச்சி எதிர்மறையாக இருக்கிறது (வீழ்ச்சி அடைந்திருக்கிறது) என்று வருத்தப்பட்டார்.

உடனடியாக மகாராஷ்டிர மாநில அரசு சாத்தியமான செயல்திட்டங்களை வகுத்து அதற்குத் தேவைப்படும் முதலீடு, இதர அடித்தள கட்டுமான வசதிகளைக் குறிப்பிட்டு மீன்வளத்துறைக்கு விண்ணப்பித்தால் மத்திய அரசு உதவக் காத்திருக்கிறது என்றார்.

மகாராஷ்டிரத்தில் மீன்பிடித்துறைமுகங்களைப் பழுதுபார்த்துச் சீரமைக்க வேண்டும், மும்பை மாநகரில் உள்ள சசூன் மீன் அங்காடியை நவீனப்படுத்த வேண்டும் என்று அவர் ஆலோசனை கூறினார்.

மீன்துறைக்குத் தேவைப்படும் நிலத்தை மாநில அரசு ஒதுக்க வேண்டும், கடலோர மீனவர்களின் வீட்டுவசதித் தேவைகளை மாநில அரசு பூர்த்தி செய்ய வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

மகாராஷ்டிர தொழில்துறை அமைச்சர் நாராயண் ரானே பேசுகையில், நாட்டின் மொத்த மீன் ஏற்றுமதி 9,000 கோடி ரூபாய் என்றும் அதில் குஜராத், மகாராஷ்டிரத்தின் பங்கு மட்டும் 2,000 கோடி ரூபாய் என்றும் சுட்டிக்காட்டினார்.

மீன் ஏற்றுமதியில் மகாராஷ்டிரத்தின் பங்கு மட்டும் 1,600 கோடி ரூபாய் என்றாலும் மீனவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திருக்கிறதா என்று ஆத்ம பரிசோதனை செய்ய வேண்டும் என்று அவர் கேட்டார்.

கொங்கண் பகுதிதான் மகாராஷ்டிரத்தில் மீன்வளர்ச்சிக்கு பெரிதும் உதவுகிறது. அந்தப் பகுதியைச் சேர்ந்தவரான நாராயண் ரானே, தங்கள் பகுதியில் மீன்களை உலர்த்தவும் பதப்படுத்தவும் சந்தைப்படுத்தவும் போதிய வசதிகள் இன்னமும் செய்யப்படவில்லை என்று வருத்தமுடன் குறிப்பிட்டார். மீன்களைக் கெடாமல் வைத்திருக்கும் குளிரூட்டப்பட்ட கிடங்குகள்கூட இன்னமும் போதிய அளவில் கட்டப்படவில்லை என்று சுட்டிக்காட்டினார்.

கொங்கண் பகுதியில் எந்த வளர்ச்சி திட்டத்தை மேற்கொண்டாலும், ""சுற்றுச்சூழல் கெடுகிறது" என்று ஒரு கூட்டம் கொடி பிடிப்பதை அவர் கண்டித்தார். ""வளர்ச்சி இல்லாமல் ஒரு சமுதாயம் எப்படி முன்னேற முடியும், இந்த மண்ணைச் சேர்ந்த நாங்கள் எங்கள் வயிற்றுப்பிழைப்புக்காக சுற்றுச்சூழலை அப்படியா நாசப்படுத்திவிடுவோம்?" என்று ஆவேசமாகக் கேட்டார் ரானே.

முதல்வர் பிருதிவிராஜ் சவாணும் நிகழ்ச்சியில் பேசினார். பாகிஸ்தானிலிருந்து வந்த பயங்கரவாதிகள் மும்பை மாநகரில் தாக்குதல் நடத்தியதை அடுத்து கடலில் மீன் பிடிக்கும் மீனவர்களை கடலோரக் காவல் படையினரும் மற்றவர்களும் அடிக்கடி நிறுத்தி சோதிப்பதைக் குறிப்பிட்ட அவர் மீனவர்களுக்கு உரிய அடையாள அட்டைகளும் இதர பாதுகாப்பும் மாநில அரசால் வழங்கப்படும் என்று உறுதி அளித்தார்.

மீன்வளர்ச்சிக்காக இங்கு தெரிவிக்கப்பட்ட யோசனைகள் அமல்படுத்தப்பட்டு மீன்வளர்ச்சியில் மகாராஷ்டிரம் புதிய புரட்சியைச் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று உறுதி அளித்தார்.

**"காய்கறிகளை அரசே நேரடியாக கொள்முதல் செய்து விற்பனை செய்ய வேண்டும்'**

First Published : 26 Dec 2010 02:52:47 PM IST

கோவில்பட்டி, டிச. 25: காய்கறிகளை அரசே விவசாயிகளிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்து விற்பனை செய்ய வேண்டும் என அகில இந்திய விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் பாலகிருஷ்ணன் கூறினார்.

கோவில்பட்டியில் 2 நாள்கள் நடைபெற்ற அகில இந்திய விவசாயிகள் சங்க பவள விழா அரசியல் பயிற்சி முகாமின் நிறைவுநாள் நிகழ்ச்சியில் பங்கேற்ற அதன் மாநிலத் தலைவர் பாலகிருஷ்ணன் செய்தியாளர்களிடம் மேலும் கூறியதாவது:

தமிழ்நாடு முழுவதும் தற்போது பெய்த தொடர்மழையால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். மழையால் சேதமடைந்த நெல் மற்றும் மானாவாரிப் பயிர்களுக்கு அரசு நிவாரணத் தொகையை அறிவித்துள்ளது. அது போதுமானதாக இல்லை.

அறிவிப்பு செய்யப்பட்டுள்ள நிவாரணத்தொகை கூட இன்னும் வழங்கவில்லை. காய்கறிகள், வாழைகள், வெங்காயம் உள்ளிட்ட தோட்டப்பயிர்களுக்கும் நிவாரணத் தொகை வழங்க வேண்டும். மானாவாரி நிலங்களுக்கு அரசு வழங்கும் கடன்போல தோட்டப்பயிர்களுக்கும் கடன் வழங்கி, விவசாயிகளை ஊக்கப்படுத்த வேண்டும். தற்போது விவசாயிகள் தோட்டப்பயிர்களுக்காக தனிநபர்களிடம் கடன்களைப் பெற்று வருகின்றனர்.

பாலை அரசு கொள்முதல் செய்து கூட்டுறவில் விற்பனை செய்வதுபோல, தோட்டக்கலைப் பயிர்களையும் அரசே நேரடியாக கொள்முதல் செய்து நியாயவிலைக் கடைகள் மூலம் விற்பனை செய்ய வேண்டும். இதனால், விவசாயிகளும், நுகர்வோரும் பயனடைவர்.

தூத்துக்குடி மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் இதுபோன்ற செயல்கள் மிக அதிகளவில் நடைபெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது என்றார் அவர்.

அகில இந்திய விவசாயிகள் சங்க மாநில பொதுச் செயலர் சண்முகம் கூறியதாவது:

தற்போது பெய்த மழையால் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மதிப்பீட்டுக் குழுவினர் ரூ. 2 ஆயிரம் கோடி வேளாண்மை உற்பத்தி பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக மிகக் குறைவாக மதிப்பீடு செய்துள்ளனர். மாநில அரசு, மத்திய அரசிடம் கூடுதல் நிவாரண நிதி பெற முன் வரவேண்டும். சேதமடைந்த நெல் மற்றும் பாசிப்பயறுக்கு அறிவிக்கப்பட்ட நிவாரணத் தொகையை விட கூடுதலாக வழங்க வேண்டும். நீல நாக்கு நோயால் பாதிக்கப்பட்டு இறந்த ஆடுகளுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும்.

செம்மறி ஆடுகளுக்கு மட்டுமல்லாமல் வெள்ளாடுகளுக்கும் நஷ்டஈடு வழங்க வேண்டும். இறந்த ஆடுகளை பிரேதப் பரிசோதனை செய்ய வேண்டும் என்ற திட்டத்தை ரத்து செய்ய வேண்டும். தாமிரபரணி தண்ணீரை தொழிற்சாலைகளுக்குப் பயன்படுத்துவதால் விவசாயம் பாதிக்கப்படுகிறது.

அதை உடனடியாக தடுக்க வேண்டும். கடல் நீரை தொழிற்சாலைகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பேட்டியின்போது தூத்துக்குடி மாவட்ட விவசாயிகள் சங்கத் தலைவர் ராகவன், மாவட்டச் செயலர் பெருமாள், மாநில துணைச் செயலர் ஏழுமலை ஆகியோர் உடனிருந்தனர்.

**பசுந்தேயிலைக்கு கூடுதல் விலை கிடைக்க நடவடிக்கை**

First Published : 26 Dec 2010 10:50:58 AM IST

மஞ்சூர், டிச. 25: பசுந்தேயிலைக்கு கூடுதல் விலை கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஊரக தொழில்துறை அமைச்சர் பொங்கலூர் நா.பழனிசாமி தெரிவித்தார்.

நீலகிரி மாவட்டத்தின் முக்கியத் தொழிலான தேயிலை விவசாயத்தை நம்பி, 75 சத மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் சிறு, குறு விவசாயிகள்.

தேயிலை விவசாயிகளின் நலனுக்காக மாவட்டத்தில் 15 கூட்டுறவு தேயிலை ஆலைகள் செயல்பட்டு வருகின்றன. சுமார் 20 ஆயிரம் விவசாயிகள், கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களாச் சேர்ந்து, ஆலைகளுக்கு பசுந்தேயிலையை வழங்கி வருகின்றனர்.

இதற்கிடையில் பசுந்தேயிலைக்கு தனியார் ஆலைகளில் வழங்கும் விலையை, கூட்டுறவு ஆலைகளிலும் வழங்க வேண்டுமென விவசாயிகள் வலியுறுத்தி வருகின்றனர். மேலும், பசுந்தேயிலை விலை குறைவதைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நீலகிரி மாவட்ட இன்ட் கோ உறுப்பினர்கள் நலச் சங்கம் வலியுறுத்தி வந்தது.

இந்த நிலையில், பசுந்தேயிலை விலை குறைவதைத் தடுப்பதற்கான ஆலோசனைக் கூட்டம், ஊரக தொழில்துறை அமைச்சர் பொங்கலூர் நா.பழனிசாமி தலைமையில் கோவையில் வியாழக்கிழமை நடைபெற்றது.

இதில், நீலகிரி மாவட்ட இன்ட் கோ உறுப்பினர்கள் நலச் சங்கத் தலைவர் டி.பி.ராமன், செயலர் சகாதேவன், நிர்வாகிகள் டி.பெள்ளி, பெள்ளிமுத்தன், மணிவண்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கூட்டுறவு தேயிலை ஆலைகள் நஷ்டத்தில் இயங்குவதைத் தடுக்க, ஆலைகளின் கடன்களை தள்ளுபடி செய்வது, கூட்டுறவு தேயிலை ஆலைகளில் பணியாற்றும் அதிகாரிகளுக்கு அரசு சார்பில் மாத ஊதியம் வழங்குவது, ஆலையை திறம்பட நடத்த கூட்டுறவு உறுப்பினர்கள் அடங்கிய குழுவை அமைப்பது, தனியார் ஆலைகளுக்கு இணையாக பசுந்தேயிலைக்கு கூடுதல் விலை வழங்குவது உள்ளிட்ட கோரிக்கைகளுக்கு தீர்வு காணப்படும் என அமைச்சர் பொங்கலூர் நா.பழனிசாமி தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில், கதர் வாரிய அமைச்சர் ராமச்சந்திரன், உதகை முன்னாள் எம்எல்ஏ டி.குண்டன், பிரமுகர்கள் ஜோகி, கிங்ஸ்லி, அப்பச்சன் மற்றும் கூட்டுறவு ஆலைகளின் பிரதிநிதிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

**விவசாயிகளுக்கு இலவச இடு பொருள்**

First Published : 25 Dec 2010 12:09:00 PM IST

அவிநாசி,டிச. 24: அவிநாசி தோட்டக் கலைத் துறை மற்றும் மழை பயிர்கள் துறை மூலமாக விவசாயிகளுக்கு இலவச இடு பொருள் வழங்கப்படுகிறது.

ஒருங்கிணைந்த தோட்டக் கலை அபிவிருத்தி திட்டம், தேசிய தோட்டக் கலை இயக்கம் மற்றும் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் சார்பில் மா, பெருநெல்லி, வாழை, கோகோ பயிர்களுக்கு இடு பொருட்கள் வழங்கப்படுகிறது.

இந்நிலையில், டிச. 28-ம் தேதி சூரியம்பாளையம் மற்றும் 29-ம் தேதி சேவூர் கிராமம் முழுவதும் தோட்டக் கலைத் துறை சார்பாக இடு வழங்கவுள்ளது.

இதனை பெற விரும்பும் பயனாளிகள் கணினி சிட்டா, அடங்கல், விஏஒ சான்று, குடும்ப அட்டை நகல், புகைப்படம் ஒன்று ஆகிய இந்த 5 ஆவணங்களை கொண்டு வர வேண்டும்.

இத்தகவல் அவிநாசி தோட்டக் கலைத் துறை உதவி இயக்குநர் எஸ்,ராஜேந்திரன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது .

**விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்**

First Published : 26 Dec 2010 12:08:24 PM IST

சிவகங்கை, டிச. 25: சிவகங்கையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நெற் பயிர்களுடன் வந்து ஆட்சியரிடம் விவசாயிகள் முறையிட்டனர்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற இக் கூட்டத்துக்கு ஆட்சியர் சம்பத் தலைமை வகித்தார். கூட்டத்தில் வேளாண்மைத் துறை உள்ளிட்ட பல்வேறு துறை அதிகாரிகளும் பங்கேற்றனர்.

கூட்டத்துக்கு மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலிருந்தும் பெண்கள் உள்ளிட்ட விவசாயிகள் மழை, வெள்ளத்தால் நோய் தாக்கப்பட்டு சேதமடைந்த நெற் கதிர்களை எடுத்து வந்திருந்தனர்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் ஏ.ஆர்.கே.மாணிக்கம், தலைவர் பி.ஆதிமூலம் ஆகியோர் தலைமையில் விவசாயிகள் ஆட்சியர் சம்பத்தை சந்தித்து, நோய் தாக்கிய நெற் கதிர்களை காட்டி தங்களுக்கு விரைந்து நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தினர்.

அப்போது பேசிய ஆட்சியர், பாதிக்கப்பட்ட பயிர்களை புகைப்படம் எடுத்து ஆதாரத்துடன் விவசாயிகள் விண்ணப்பித்தால் விரைந்து நிவாரணம் கிடைக்க நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார். பின்னர் விவசாயிகள் மற்றும் விவசாயிகள் சங்க பிரதிநிதிகள் பல்வேறு கேள்விகளுக்கு ஆட்சியர் மற்றும் அதிகாரிகள் பதிலளித்தனர்

**விவசாயிகளுக்கு மானிய விலையில் பூச்சிக்கொல்லி மருந்துகள், உபகரணங்கள்**

First Published : 26 Dec 2010 11:57:39 AM IST

திருவாடானை, டிச.25: திருவாடானை தாலுகாவில் பயிர்களைத் தாக்கும் நோய்களைக் கட்டுப்படுத்தும் மருந்துகள் மற்றும் மருந்து தெளிப்பு உபகரணங்கள், மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படுவதாக வேளாண் அதிகாரி தெரிவித்தார்.

தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் மூலம், நெற்பயிரில் பூச்சி நோய்களைக் கட்டுப்படுத்த, மானிய விலையில் பயிர் பாதுகாப்பு மருந்துகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

தற்போது திருவாடானை தாலுகாவில் நெற்பயிரில் பூச்சிநோய்த் தாக்குதல் தென்படுகிறது. ஆகவே, கிராமங்களில் பயிர் பாதுகாப்பு சம்பந்தமான விளம்பரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வேளாண் மையங்களில் பயிர் பாதுகாப்பு மருந்துகள் போதுமான அளவில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

50 சதவீத மானியத்தில் பூச்சிக் கொல்லி மருந்துகளான எண்டோசல்பான்,டிரைசோபாஸ், மோனோகுரோபாஸ் மற்றும் மேஸ்கோசப் மருந்துகள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

நோயால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்களை எடுத்துவந்து, வேளாண் மைய அலுவலரிடம் காட்டி, நோய் தாக்குதலுக்குத் தகுந்தவாறு பூச்சிக் கொல்லி மருந்துகளை வேளாண் விரிவாக்க மையத்தில் மானிய விலையில் வாங்கிக் கொள்ளும்படியும், உபகரணங்களான கை தெளிப்பானுக்கு ரூ. 800 மானியமும், விசைத் தெளிப்பானுக்கு ரூ. 2 ஆயிரம் மானியமும் விவசாயிகளுக்கு வழங்கப்படுவதாகவும் ஆர்.எஸ். மங்கலம் வேளாண் உதவி இயக்குநர் முகம்மது அப்துல் நசீர் தெரிவித்தார்.

**நெல்லில் இலைக்கருகல், இலைக் கீரல் நோயை கட்டுப்படுத்தும் வழிமுறைகள்**

First Published : 26 Dec 2010 01:24:18 PM IST

தஞ்சாவூர், டிச. 25: நெல் பயிரைத் தாக்கும் இலைக்கருகல், இலைக் கீரல் நோயை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தஞ்சை மாவட்ட வேளாண் இணை இயக்குநர் பொ. லோகநாதன் தெரிவித்துள்ளதாவது:

தஞ்சாவூர் மாவட்டத்தில் அண்மையில் பெய்த தொடர் மழையால் சாகுபடி செய்யப்பட்டுள்ள சம்பா, தாளடி நெல்பயிர்களில் பாக்டீரியல் இலைக்கருகல் நோய் மற்றும் பாக்டீரியல் இலைக் கீரல் நோய் தாக்கி மற்ற வயல்களுக்கும் பரவும் நிலை ஏற்பட்டுள்ளது.

இலைக்கருகல் நோய் தாக்கிய நெல் பயிரின் இலையில் நீர் கோர்த்து மஞ்சல் அல்லது வைக்கோல் நிறத்தில் ஒழுங்கற்ற புள்ளிகள் நீண்ட கோடுகள் போன்று இலைகளின் ஓரங்களில் அலை, அலையாகக் காணப்படும்.

இலையின் நுனியில் தொடங்கி, கீழ் நோக்கி இலைகளின் இருபுறமும் காய்ந்து காணப்படும். இலையின் நடுப்பகுதி பச்சை நிறமாக இருக்கும். நெல்கதிர் உருவாகும் தருணத்தில் இருந்தால் மகசூல் பாதிப்பு ஏற்படும்.

இலைக் கீரல் நோய் தாக்கப்பட்ட நெல் பயிரில் இலையின் வெள்ளை நிற கோடுகள் காணப்படும். இதனால், பயிர்கள் காய்ந்து மகசூல் இழப்பு ஏற்படும்.

இந்த நோயைக் கட்டுப்படுத்த 20 சதம் பசுஞ்சாணக் கரைசலை தெளிக்கலாம். ஓர் ஏக்கருக்கு 40 கிலோ பசுஞ்சாணத்தை முதல் நாள் 50 லிட்டர் நீரில் ஊர வைத்து நன்றாக கலக்கிவிட வேண்டும்.

மறுநாள் காலை தெளிந்த கரைசலை வடிகட்டி 150 லிட்டர் நீ0ர் சேர்த்து கைத் தெளிப்பான்கள் மூலம் வயலில் தெளிக்க வேண்டும்.

நோய்த் தாக்குதல் மிகவும் அதிகமாகக் காணப்பட்டால், ஏக்கருக்கு ஸ்டெப்ரோமைசின் சல்பேட் 120 கிராம் மற்றும் 300 கிராம் காப்பர் ஆக்ஸி குளோரைடு ஆகியவற்றை 200 லிட்டர் தண்ணீரில் கரைத்து கைத் தெளிப்பான் மூலம் தெளித்து நோய்களை கட்டுப்படுத்தலாம் என்றார் லோகநாதன்.

தினமலர்

**நெல் சாகுபடியில் நோய் பாதிப்பு : வேளாண் அதிகாரிகள் எச்சரிக்கை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 27,2010,01:10 IST

சேலம்: பருவ நிலை மாற்றத்தால் ராஜராஜன் 1000 நெல் மற்றும் இதர நெல் சாகுபடியில் நோய் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. கோசைட், டில்ட் மருந்தை தெளித்து பயிர்களை காப்பாற்ற வேண்டும் என, வேளாண் அதிகாரிகள் தெரிவித்தனர்.

தமிழகத்தில் பெரும்பாலான விவசாயிகள் "ராஜராஜன் 1000' என்ற செம்மை நெல் சாகுபடி முறைகளை பின்பற்றி நெல் நடவு செய்துள்ளனர். சாகுபடி செய்துள்ள நெல் பயிர்கள் வளர்ச்சி மற்றும் முதிர்ச்சி நிலைகளில் உள்ளது. தற்போது பருவநிலை மாறுபட்டுள்ளது. பகல் நேரத்தில் லேசானது முதல் மிதமான மழையும், இரவு நேரங்களில் மிக கடும் குளிரும், பனிப்பொழிவும் காணப்படுகிறது.

இந்த பருவநிலை மாற்றத்தால், நெல் பழம் நோய் தாக்குதல் பூ மற்றும் கதிர் நிலையில் உள்ள நெல் பயிரில் காணப்படுகிறது. ஒரு வகையான பூஞ்சானத்தால் ஏற்படும் இந்நோய் அனைத்து ரக நெல் பயிரையும் தாக்கக்கூடியது. நெல் கதிரில் மஞ்சள் நிறமாக மரு போன்ற தோற்றத்தில் இருக்கும். இப்பூஞ்சான நோய் குளிரான பருவநிலையில், அனைத்து ரக நெல் பயிரிலும் பூ மற்றும் கதிர் நிலையில் தாக்குதலை ஏற்படுத்தி மகசூலை குறைக்கும். இதை கட்டுப்படுத்த கோசைட் 1.5 கிராம் மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். அல்லது டில்ட் 2.5 மில்லி மருந்தை, ஒரு லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும். நெல் பயிரின் பூ பருவத்துக்கு முன் ஒரு முறையும், 15 நாட்கள் கழித்து ஒரு முறையும் தெளித்து கட்டுப்படுத்தலாம்.

சேலம் வேளாண் இணை இயக்குனர்(பொறுப்பு) உதயகுமார் கூறியதாவது: சேலம் மாவட்டத்தில் இந்த ஆண்டு இயல்பான மழையைவிட அதிக மழை பெய்துள்ளது. 1229.9 மி.மீ மழை அதிகமாக கிடைத்துள்ளது. 22,575 ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்பட்டதில், ராஜராஜன் 1000 சாகுபடி 10,850 ஏக்கரில் செய்யப்பட்டுள்ளது. பருவநிலை மாற்றத்தால் நெல் பழம் நோய் தாக்குதல் ஏற்பட்டுள்ளது. கட்டுப்படுத்த கோசைட், டில்ட் மருந்துகளை தெளிக்கலாம். மகசூல் குறைவை உண்டாக்கும் இந்நோயை விவசாயிகள் உடனடியாக கட்டுப்படுத்த வேண்டும். மேலும் விபரங்களுக்கு, அருகில் உள்ள வேளாண் விரிவாக்க மையங்களையோ, அதிகாரிகளையோ தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அவர் கூறினார்.

**பருத்தியில் பூச்சி தாக்குதல் அதிகரிப்பு : பயிர் பாதுகாப்பை பின்பற்ற அறிவுரை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 27,2010,01:23 IST

நாமக்கல்: "பருத்திச் செடிகளை தாக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்த பயிர் பாதுகாப்பு முறைகளை பின்பற்ற வேண்டும்' என, நாமக்கல் உழவர் பயிற்சி நிலைய வேளாண் துணை இயக்குனர் நடராஜன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: பருத்தி செடிகளில் தென்படும் முட்டைகள், புழுக்கள் மற்றும் தாக்கப்பட்ட பூ மொட்டுகள், பிஞ்சுகள், காய்கள் ஆகியற்றை புழுக்கள் தோன்ற ஆரம்பத்தில் இருந்து அடிக்கடி சேகரித்து அழிக்க வேண்டும். தாக்கப்பட்டு கீழே உதிர்ந்து போன பூ மொக்குகள், காய்கள் முதலியவற்றையும் சேகரித்து அழித்தல் வேண்டும்.

புள்ளிக்காய்ப்புழு தாக்குதலால் வாடியுள்ள குருத்துக்களை உள்ளே உள்ள புழுவுடன் கிள்ளி அழிக்க வேண்டும். இளஞ்சிவப்பு காய்ப்புழு மற்றும் அமெரிக்கக் காய்ப்புழுவின் அந்துகளும் இரவில் விளக்கு வெளிச்சத்தால் கவரப்பட்டுகின்றன. அதனால் விளக்குப்பொறிகளை இரவில் பல இடங்களில் அமைத்து இவ்வகை அந்து பூச்சிகளை அழிக்கலாம். செடியின் சப்பைகளில் புழுக்கள் தென்பட்டால் 15 நாட்கள் இடைவெளி விட்டு 7 முதல் 9 முறை மோனாகுரோடோபாஸ் 350 மி.லி., அல்லது போசலோன் 700 மி.லி., அல்லது எண்டோசல்பான் 550 மி.லி., தெளிக்கலாம்.

இளம் சிவப்பு காய்ப்புழுக்கள் இருக்கும் விதைகளில் இருந்து இப்பூச்சி வளர்ந்த செடிக்கு பரவும். அதனால், விதைகளில் காணப்படும் புழுக்களை அழிக்க மீதைல் புரோமைடு ஒன்றை கிலோ 1,000 கனமீட்டர் அளவிலும் அல்லது பாஸ்டாக்ஸின் வில்லை 18 வில்லைகள் 10 கன மீட்டர் அளவிலும் உபயோகித்து விஷவாயு மண்டலம் உண்டாக்கி புழுக்களை அழிக்கலாம்.

விளக்கு பொறிகள் அந்துப்பூச்சிகளை கொல்வதோடு, பூச்சிகள் தோட்டத்தில் பயிர்களில் விழுந்துவிட்டன என்ற அறிகுறியும் அதற்கேற்ப பாதுகாப்பு நடவடிக்கைகளையும் எடுக்க உதவும். பருத்தி பயிரின் காலம் முடிந்ததும் பருத்திச் செடிகளை காட்டில் இருந்து எடுத்து விறகாக உபயோகப்படுத்தும் முன், அவைகளில் உள்ள காய்கள், பிஞ்சுகள், விதைகளை முதலிய செடிகளை அறவே எடுத்து அழிக்க வேண்டும். அதனால் செடிகளில் உள்ள புழுக்கள் புதிதாக பயிரிடப்படும் செடிகளை தாக்குவதை தவிர்க்கலாம். பருத்திப்பயிரை தொடர்ந்து மறுபடியும் பருத்திப் பயிரை பயிரிடுவதை தவிர்க்க வேண்டும். அதனால், புழுக்களின் அபிவிருத்தியை நன்றாக கட்டுப்படுத்த உதவும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**காய்கறி விதை இருப்பு வேளாண் அதிகாரி தகவல்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 27,2010,01:23 IST

ராசிபுரம்: வெண்ணந்தூர் யூனியனுக்கு உட்பட்ட விவசாயிகளுக்கு தேவையான காய்கறி விதைகள் தோட்டக்கலைத்துறை அலுவலகத்தில் இருப்பு உள்ளது என, உதவி இயக்குனர் (பொறுப்பு) தமிழ்ச்செல்வி தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கை: காய்கறி சாகுபடியில் பயிர் பாதுகாப்பு விவசாயிகளுக்கு பெரும் சவாலாக உள்ளது. ரசாயன பூச்சிக் கொல்லிகளை பயன்படுத்தும்போது, நாளடைவில் வேளாண் விளைபொருள்களின் உற்பத்தி செலவு அதிகரிக்கிறது. பயிர் உற்பத்தி செலவில் மூன்றில் ஒரு பங்கு பூச்சிக்கொல்லிகளுக்கு செலவிடப்படுகிறது. எதிர்கால சந்ததியினருக்கும் பல்வேறு பாதிப்புகள் ÷ற்படுகிறது. அதனால், பயிர்களுக்கும், மனித உயிர்களுக்கும் தீங்கு விளைவிக்கக்கூடிய ரசாயன பூச்சிக்கொல்லிகளை தவிர்க்க வேண்டும்.

இயற்கை வழியில் கிடைக்கும் பல அற்புதமான பூச்சி விரட்டி முறைகளை கடைபிடித்து செலவை கட்டுப்படுத்தலாம். பூச்சி மற்றும் பூஞ்சான நோய்கள் எதிர்ப்பு திறன் கொண்ட ரகங்களை தேர்ந்தெடுக்க வேண்டும்.

பயிர் நன்கு செழித்து வளரும்போது, உயிரியல் பூச்சிக்கொல்லிகளை பயன்படுத்த வேண்டும். நடவு வயலில் உயிரியல் உரங்களை அதிகளவில் பயன்படுத்த வேண்டும். சாறு உறிஞ்சும் பூச்சிக்கொல்லிகளை கட்டுப்படுத்த பயறு வகை பயிர்களை ஊடுபயிராக ஆங்காங்கே பயரிட்டு பொறி வண்டுகள் மூலம் கட்டுப்படுத்தலாம்.

காய்புழுக்களை கட்டுப்படுத்த விளக்குப்பொறி வைத்து தாய் அந்துப்பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம். வெண்ணந்தூர் யூனியனுக்கு உட்பட்ட விவசாயிகளுக்கு தேவையான காய்கறி விதைகள் யூனியன் அலுவலக வளாகத்தில் செயல்பட்டு வரும் தோட்டக்கலைத்துறை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**ஒரு கிலோ மல்லிகை விலை ஆயிரத்தை தொட்டது**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 27,2010,00:18 IST

கோவை:கோவையில் நேற்று பூக்கள் வரத்து குறைந்து பற்றாக்குறை ஏற்பட்டதால், ஒரு கிலோ மல்லிகை விலை ஆயிரம் ரூபாயை எட்டிப்பிடித்தது. கோவை பூ மார்க்கெட்டுக்கு மதுரை, நிலக்கோட்டை, சத்தியமங்கலம், புளியம்பட்டி, அன்னூர், பெரிய நாயக்கன்பாளையம், துடியலூர் பகுதிகளிலிருந்து பூ விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது.

வடகிழக்கு பருவமழையால் ஏராளமான பயிர்கள் நாசமடைந்தன. இதில் பூச்செடிகளும் தப்பவில்லை. கோவை மட்டுமல்லாமல் தமிழகம் முழுக்க பூக்களுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டது. கோவை பூ மார்க்கெட் வியாபாரி சீனிவாசன் கூறியதாவது: கோவை பூமார்க்கெட்டிற்கு நள்ளிரவு, அதிகாலை, மதியம், மாலை என்று நான்கு வேளைகளில் உள்ளூரிலிருந்தும், வெளியூரிலிருந்தும் பூக்கள் விற்பனைக்கு வரும். தற்போது மதிய நேரத்தில் மட்டுமே குறைந்த அளவு விற்பனைக்கு வருகிறது.

வழக்கமாக மார்கழி மாதம் பனிப்பொழிவு இருக்கும். அப்போது விளைச்சல் குறைந்து போகும். இந்த ஆண்டு எதிர்பாராத மழையால், பூச்செடி மற்றும் கொடி சேதமடைந்ததால் கடும் தட்டுபாடு ஏற்பட்டு விலை உயர்ந்துள்ளது.கடந்த வாரம், கிலோ மல்லி அதிக பட்சமாக 800 ரூபாய் வரை விற்றது. ஆனால், பற்றாக்குறை காரணமாக இன்று (நேற்று) ஆயிரம் ரூபாயை எட்டிப்பிடித்தது. மார்கழி மாதம் என்பதால் திருமண விசேஷங்கள் எதுவுமில்லை. அய்யப்ப பக்தர்கள் மாலை அணியும் வைபவத்திற்கும், கோவில் பூஜைகளுக்கும் பூக்கள் குறைந்த அளவு சப்ளை செய்யப்படுகிறது. அந்த சூழலிலும் பூ விலை உயர்ந்துள்ளது, யாரும் எதிர்பார்க்காத ஒன்று. நிலைமை சீராக இனியும் சில நாட்கள் பொறுத்திருக்க வேண்டும், என்றார். மல்லிகைப்பூ அதிக விலைக்கு விற்பனையாவதால் ஒரு முழம் அதிக பட்சமாக 25 முதல் 40 ரூபாய் வரை விற்பனையாகிறது.

**வீடு தேடி விவசாயிகளுக்கு இடுபொருட்கள் வழங்கல்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 27,2010,00:13 IST

கந்தர்வக்கோட்டை: கந்தர்வக்கோட்டை வேளாண்மை கோட்டத்தில் நடமாடும் உழவர் நண்பர் வாகனம் மூலம் அனைத்து வருவாய் கிராமங்களிலும் கடந்த பத்தாம் தேதி முதல் 20ம் தேதி வரை தொழில் நுட்பம் செய்திகளோடு விவசாயிகளுக்கு தேவைப்படும் பயிர்பாதுகாப்பு மருந்துகள் கைதெளிப்பான் மற்றும் நுண்கதிர்கள் விவசாய இடுபொருட்கள் மானியவிலையில் விவசாயிகள் வீடு தேடி சென்று வழங்கப்பட்டது.

மேலும் விவசாயிகளுக்கு அடையாள அட்டை வழங்கும் விண்ணப்பமும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகள் இந்த விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து சாகுபடி தொடர்பான ஆதாரம் மற்றும் புகைப்படத்துடன் கந்தர்வக்கோட்டை வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் சேர்க்குமாறு கந்தர்வக்கோட்டை வேளாண்மை உதவி இயக்குனர் வைத்தியநாதன் தெரிவித்தார்.

**தென்னை சார்ந்த தொழில்கள் துவங்க 25% மானியத்தில் வங்கி மூலம் கடன்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 27,2010,00:09 IST

பட்டுக்கோட்டை: பட்டுக்கோட்டை செந்தில்குமரன் மண்டபத்தில் தென்னை வளர்ச்சி வாரியம், பட்டுக்கோட்டை தென்னை வளர்ச்சி வாரியம் சார்பில் தென்னை சார்ந்த விவசாயிகள் கருத்தரங்கு நடந்தது.

கோவை வேளாண் பல்கலை முன்னாள் இயக்குனர் முருகப்பன் துவக்கி வைத்தார். இணைச் செயலாளர் சிரஞ்சீவி வரவேற்றார். தென்னை வளர்ச்சி வாரிய மண்டல இயக்குனர் ஹேமச்சந்திரன் விவசாயிகளுக்கு உரம் மற்றும் விவசாய இடுபொருட்களை வழங்கி பேசியதாவது: பட்டுக்கோட்டை பகுதியில் கடந்த நான்காண்டுகளாக தென்னை வளர்ச்சி வாரியத்தின் மூலம் இந்த செயல் விளக்க திட்ட கருத்தரங்கு நடக்கிறது. பட்டுக்கோட்டை தென்னை வளர்ப்போர் சங்கம் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது. இதுவரை இத்திட்டத்தின் கீழ் தமிழகம் முழுவதும் உரம் மற்றும் இடுபொருட்கள் 16 கோடி ரூபாய் அளவில் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

இந்த பகுதியில் தென்னை அதிக அளவில் பயிரிடப்படுவதால், தென்னை சார்ந்த தொழில்கள் தொடங்குபவர்களுக்கு திட்ட மதிப்பீட்டில் வங்கிகளால் திட்ட மதிப்பீட்டில் 40 சதவீதத்துக்கு குறையாமல் கடன் வழங்கும் பட்சத்தில் தென்னை வளர்ச்சி வாரியத்தின் மூலம் 25 சதவீதம் மானியமாக வழங்கப்படும்.

மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் உற்பத்தி செய்யவும், ஏற்றுமதி செய்யவும் தென்னை சார்ந்த தொழில்களில் அதிக வாய்ப்புள்ளது. எனவே, தென்னை சார்ந்த தொழில் செய்பவர்கள் தென்னை வளர்ச்சி வாரியத்தை தொடர்பு கொண்டு பயன்பெற வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

**கனமழையால் நெற்பயிரில் செந்தாழை செவட்டை நோய் தாக்கி பாதிப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 27,2010,01:50 IST

முள்ளிப்பள்ளம் : சோழவந்தான் பகுதியில் பெய்த தொடர் கனமழையால், செந்தாழை, செவட்டை நோய் தாக்கி நெற்பயிர் பாதிப்படைந்தது.

சோழவந்தான், தென்கரை, முள்ளிப்பள்ளம், மேலக்கால், ஊத்துக்குழி, குருவித்துறை, மட்டையான் பகுதி நூற்றுக்கு மேற்பட்ட ஏக்கர் நிலத்தில் கல்சர், கர்நாடகபொன்னி, ஏ.எஸ்.டி.16

ரக நெல்விதை பயிரிடப்பட்டது. தற்போது நெல்மணியில் பால்பிடிக்கும் பருவத்தில், தொடர் கனமழை பெய்ததில் வயலில் தண்ணீர் தேங்கி நின்றது. இதனால் நெற்கதிரில் செந்தாழை, செவட்டை நோய் தாக்கியது. இதில் வேர் அழுகி, கதிர்கள் சருகாகி, பால்பிடிப்பு வளர்ச்சி குறைந்து நெல்மணி கருகியது. நோயை கட்டுப்படுத்த விவசாயிகள் பூச்சி கொல்லி மருந்துகள் தெளித்தும் பயனில்லை. தென்கரை, ஊத்துக்குழி, கீழமட்டையான்,முள்ளிப்பள்ளம் பகுதியில் 80 ஏக்கரில் பயிரிட்ட நெற்பயிர் சேதமடைந்தது.

**மழை பாதிப்பு கணக்கெடுக்க வேண்டும் : தஞ்சை குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தல்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 27,2010,00:06 IST

தஞ்சாவூர்: தஞ்சாவூர் கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் கலெக்டர் சண்முகம் தலைமையில் நடந்தது.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் ஜீவகுமார்: கனமழையால் பாதித்த பயிர்களுக்கு ஹெக்டேருக்கு ரூபாய் பத்தாயிரம் என்று அரசு அறிவித்துள்ளது. உற்பத்தி செலவு மூன்று மடங்கு ஆகிவிட்டது. எனவே, ஏக்கருக்கு ரூபாய் 15 ஆயிரம் வழங்க வேண்டும். ஒரு கிலோ வெங்காயத்தின் விலை ரூபாய் 100, பூண்டின் விலை ரூபாய் 300, ரோஜா பூவின் விலை ரூபாய் ஐந்து, கருவ மரகட்டையின் விலையை கேட்கவே முடியாத அளவுக்கு உயர்ந்துள்ளது.ஆனால், கரும்பு மட்டும் ஒரு கிலோ ரூபாய் இரண்டுக்கு விற்பனை செய்யப்படுகிறது. எனவே, கரும்புக்கு டன் ஒன்றுக்கு 3,000 ரூபாய் விலை நிர்ணயம் செய்ய வேண்டும்.
கலெக்டர் சண்முகம்: விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று அரசுக்கு பரிந்துரை செய்யப்படும்.
தமிழக விசாயிகள் சங்க தலைவர் சுகுமாரன்: வேளாண்துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம், மேட்டூர் அணையில் இருந்து உபரிநீர் சேலம், நாமக்கல் மாவட்டங்களுக்கு கொண்டு செல்ல ரூபாய் 1,134 கோடி திட்டத்தில் வாய்க்கால் வெட்டி தண்ணீர் கொண்டு செல்வதாக அறிவித்துள்ளார். இத்திட்டம் நடுவர் மன்ற தீர்ப்புக்கு எதிராக உள்ளது. மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஆய்வு செய்த குழுவினர் 75 ஆயிரம் ஏக்கர் பாதிப்பு அடைந்துள்ளதாக தெரிவித்துள்ளனர். இது சரியான கணக்கு இல்லை. முறையான கணக்கு எடுக்க வேண்டும்.
கலெக்டர் சண்முகம்: மாவட்டத்தில் வெள்ள சேத பாதிப்பு குறித்து முதல் கட்டமாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது. மாவட்டம் முழுவதும் வேமாண் துறை, வி.ஏ.ஓ., உட்பட குழுவுடன் வெள்ள சேத பாதிப்பு குறித்து கணக்கு எடுக்கப்பட்டு வருகிறது. கூடுதலாக பாதிப்பிருந்தால், அதை அரசுக்கு தெரிவித்து நிவாரண தொகையைப் பெறலாம்.

காவிரி டெல்டா விவசாயிகள் சங்க தலைவர் ரவிச்சந்தர்: தஞ்சாவூர் மாவட்டத்தில் கடந்த முறை உடைப்பு ஏற்பட்ட அதே இடத்தில் மீண்டும் உடைப்பு ஏற்பட்டு பயிர்ச்சேதம் அடைந்துள்ளது. எனவே, உடைப்பு எடுக்கும் ஆறு, வாய்க்கால் பகுதிகளில் தாழ்வான இடங்களை உயர்த்தியும், தடுப்பனைகளை உயர்த்தியும் கட்ட வேண்டும்.

கலெக்டர் சண்முகம்: பொதுப்பணித்துறை அதிகாரிகள் சம்பந்தப்பட்ட இடத்தை ஆய்வு செய்வார்கள்.

தேசியவாத காங்கிரஸ் ஜெயபால்: திருவிடைமருதூர் பகுதிகளில் கடந்தாண்டு ஏற்பட்ட நிஷா புயலால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். வங்கிக்கடனில் டிராக்டர் வாங்கியுள்ளனர். ஆழ்குழாய் மின் மோட்டார் கடன் பெற்று விவசாயிகள் இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். கடனைக்கட்டாத விவசாயிகள் மீது ஜப்தி நடவடிக்கை எடுக்கப்படுகிறது, இந்த நடவடிக்கையை கைவிட வேண்டும்.

தமிழ் மாநில விவசாயிகள் சங்க செயலாளர் சாமி நடராஜன்: கடந்தாண்டு சம்பா, தாளடி நெற்பயிர்களுக்கு பயிர் இன்சூரன்ஸ் செய்த விவசாயிகளுக்கு எவ்வளவு காப்பீட்டுத் தொகை கிடைத்துள்ளது. கடந்தாண்டு நிஷா புயலால் விவசாய நிலங்கள் மணல் திட்டாக மாறியது. இதை அப்புறப்படுத்த ஒதுக்கீடு செய்யபட்ட தொகை ரூபாய் 11 லட்சத்து 40 ஆயிரத்தை வேளாண் பொறியியல் துறை வழங்க வேண்டும்.

கலெக்டர் சண்முகம்: கடந்தாண்டு குறுவை சாகுபடி செய்து காப்பீடு செய்த விவசாயிகளுக்கு ரூபாய் 64. 94 லட்சம் வழங்கப்பட உள்ளது. அதேபோல், சம்பா சாகுபடி செய்து பயிர் காப்பீட்டு செய்த 29 ஆயிரத்து 670 விவசாயிகளுக்கு ரூபாய் நான்கு கோடியே 84 லட்சம் வழங்கப்பட உள்ளது. இந்த தொகை விவசாயிகளின் சேமிப்பு கணக்கில் வரவு வைக்கப்படும். இது தொடர்பான பிர்கா வாரியாக விரைவில் கணக்கொடுப்பு நடத்தப்படும்.

தஞ்சை மாவட்டத்தில் இதுவரை 29 ஆயிரம் முதல் 30 ஹெக்டேர் வரை சேதமடைந்துள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. பாதிப்பு கணக்கிடப்படாத ஊர்களில் வேளாண்துறை அதிகாரிகள், வி.ஏ.ஓ.,க்களை அழைத்து சென்று பாதிப்புகளை பார்வையிட வைக்கலாம்.

**குறைகிறது காய்கறி விலை: முருங்கைக்காய் கிடைக்கலே**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 27,2010,00:13 IST

குறிச்சி:கடந்த சில வாரங்களாக உச்சத்திலிருந்த வெங்காயம், தக்காளி உள்ளிட்ட காய்கறிகளின் விலை குறைந்து வருகிறது.நாடு முழுவதும் கடந்த சில வாரங்களாக வெங்காயம், தக்காளி, முருங்கை போன்றவற்றின் விலை மிகவும் அதிகரித்தது. வெங்காயத்தின் விலையை கட்டுப்படுத்த மத்திய அரசு, ஏற்றுமதியை காலவரையின்றி தடை செய்துள்ளது; பாகிஸ்தானிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. கிலோ 70 ரூபாய்க்கு விற்ற பெரிய வெங்காயம், தற்போது 45 ரூபாய் என்ற

அளவில் குறைந்துள்ளது. கோவையிலுள்ள உழவர் சந்தைகளில் நேற்றைய நிலவரப்படி, நாட்டுத்தக்காளி முதல் தரம் கிலோ 30 ரூபாய்க்கும், இரண்டாம் தரம் 24 ரூபாய்க்கும் ஆப்பிள் தக்காளி கிலோ 26 ரூபாய்க்கும் விற்கப்பட்டது.

பெரிய வெங்காயம் முதல்தரம் கிலோ 42 ரூபாய், இரண்டாம் தரம் 38; மூன்றாம் தரம் 30; சின்ன வெங்காயம் (முதல் தரம்) கிலோ 28, இரண்டாம் தரம் 24; அரசாணிக்காய் 8; பூசணி8; நாட்டுக்கத்தரிக்காய் 32; ஹைபிரிட் 28; இஞ்சி 40 ; வெள்ளரிக்காய் 14; மொச்சை 30; பாகற்காய் 18; புடலங்காய் 22; பீர்க்கங்காய் 20; சுரைக்காய் 14 ரூபாய்க்கு விற்பனையானது.ப.மிளகாய் நீண்டது 24 ரூபாய், குண்டு 30; தேங்காய் எட்டு முதல் 12 ; வெண்டைக்காய் 24; பீட்ரூட் ஊட்டி வரத்து 18; உள்ளூர் வரத்து 15; சேனைக்கிழங்கு 20; வாழைக்காய் ஒன்று 2.50; கறிவேப்பிலை 20; மல்லி 25; புதினா ஒரு கட்டு2.50; நேந்திரன் 22, 20 மற்றும் 18; பீன்ஸ் (ஊட்டி) 34; உ.கிழங்கு 20; மு.கோஸ் 18; முள்ளங்கி(சிவப்பு) 16 ரூபாய்க்கு விற்பனையானது.

காய்கறி வரத்து குறித்து, சுந்தராபுரம் உழவர் சந்தை நிர்வாக அலுவலர் பார்த்திபன் கூறுகையில், ""காய்கறி வரத்தில் குறைவு ஏற்படவில்லை. இங்கு வார நாட்களில் 20 முதல் 22 டன் வரையிலும், சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் 25 முதல் 27 டன் வரையிலும் வரத்து காணப்படும். ""முருங்கைக்காய், வெள்ளை முள்ளங்கி வரத்து கிடையாது. மொச்சை வரத்து, வரும் நாட்களில் அதிகரிக்கும். ""கடந்த இரு நாட்களாக ஊட்டியில் நடந்த திருவிழாவின் காரணமாக கேரட் வரத்து இல்லை. இதனால் இன்று (நேற்று) கேரட் கிலோ 44 ரூபாய்க்கு விற்கப் பட்டது. ""இன்று முதல் வரத்து இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது,'' என் றார்.

**பயிர் காப்பீடு திட்டம்; விவசாயிகள் புறக்கணிப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 27,2010,00:21 IST

பொங்கலூர்:பயிர் காப்பீட்டு திட்டத்தில் சேர பல நிபந்தனைகள் விதிக்கப் படுவதால், பொங்கலூர் பகுதி விவசாயிகள் இத்திட்டத்தை புறக்கணித்துள்ளனர்.இயற்கை சீற்றங் களால், பயிர்கள் பலத்த சேதமடையும் போது, விவசாயிகள் அதிகமாக பாதிக்கப்படுகின்றனர். விவசாயிகளை நஷ்டத் தில் இருந்து பாதுகாக்க பயிர் காப்பீடு திட்டம் கொண்டு வரப் பட்டது. மேலோட்டமாக பார்த் தால், இது விவசாயிகளுக்கு மிக சிறந்த திட்டமாக தெரியும். ஆனால், இதில் சேர பல நிபந்த னைகள் விதிக்கப் படுவதால், விவசாயிகள் இத் திட்டத்தை ஒட்டுமொத்தமாக புறக்கணித்துள்ளனர்.கடந்த சீசனில் 40 ஆயிரம் ரூபாய்க்கு மட்டுமே பயிர் காப்பீடு செய்யப்பட்டுள்ளது.

அதுவும் பயிர் கடன் வாங்குபவர்கள் பயிர் காப்பீடு செய்வது கட்டாயம் என்பதால், இத்தொகை காப்பீடு செய்யப்பட்டுள்ளது. இந்த சீசனில், ஒரு விவசாயி கூட காப்பீடு செய்ய முன்வரவில்லை. இத்திட்டத்தில் உள்ள குறைபாடே, இதற்கு காரணம்.குறிப்பிட்ட பகுதியில், ஒட்டுமொத்த பயிர்களும் சேதமடைந்தால் மட்டுமே இழப்பீடு கோர முடியும் என்ற நிலை உள்ளது. குறிப்பிட்ட விவசாயியின் பயிர் சேதமடைந்தால், அதற்கு இழப்பீடு கோர முடியாது என்ற நிலையே உள்ளது. இதனால், விவசாயிகள் இத்திட்டத்தில் சேர ஆர்வம் காட்டாமல் உள்ளனர்.

**விவசாயிகள் நலச்சங்கநிர்வாகிகள் கூட்டம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 27,2010,01:21 IST

பரங்கிப்பேட்டை:புதுச்சத்திரத்தில் விவசாயிகள் நலச்சங்க நிர்வாகிகள் கூட்டம் நடந்தது.ஒன்றிய தலைவர் சண்முகம் தலைமை தாங்கினார். இந்திய கம்யூ., மாவட்ட செயலாளர் மணிவாசகம், ஏ.ஐ.டி.யூ.சி., மாவட்ட செயலாளர் சேகர் பேசினர். கூட்டத்தில் தனியார் மின் நிறுவனங்களுக்கு விவசாய விளை நிலங்களை ஏமாற்றி வாங்குவதை அரசு தடுக்க வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மீன்பிடி தொழிலாளர் சங்க மாவட்ட செயலாளர் வைத்தியலிங்கம் உட்பட பலர் பங்கேற்றனர். கலைச்செல்வன் நன்றி கூறினார்.

**கொண்டை கடலைசாகுபடி பரப்பு குறைவு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 26,2010,23:40 IST

பொங்கலூர்:பொங்கலூர் பகுதியில் கொண்டை கடலை சாகுபடி செய்யும் பரப்பு குறைந்து வருகிறது.பொங்கலூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட மாதப்பூர், என்.என்., புதூர் உள்ளிட்ட இடங்களில் கரிசல் மண் காணப்படுகிறது. இப்பகுதியில், ஒவ்வொரு ஆண்டும் நவ., - டிச., மாதங்களில், கொண்டை கடலை சாகுபடி செய்யப்பட்டு, மார்ச் மாதத்தில் அறுவடை செய்யப்படும்.கரிசல் மண் காடுகள் ஈரப்பதத்தை தேக்கி வைக்கும் இயல்புடையவை. இதனால், விவசாயிகள் மானாவாரியாக கொண்டை கடலை சாகுபடி செய்து வந்தனர். நூற்றுக்கணக்கான ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்ட கொண்டை கடலை, தற்போது 10 ஏக்கர் பரப்பளவில் மட்டுமே சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

பெரும்பாலான நிலங்களில், முட்செடிகள் மற்றும் பார்த்தீனிய விஷச்செடிகள் முளைத்து தரிசாக கிடக்கிறது. விவசாய நிலங்களுக்கு நல்ல விலை கிடைப்பதால், சில விவசாயிகள், காற்றாலை

மின் உற்பத்தியாளர்களுக்கும், சிலர் ரியல் எஸ்டேட் நிறுவனங்களுக்கும் விற்பனை செய்து வருகின்றனர். இதே நிலை நீடித்தால், இன்னும் சில ஆண்டுகளில், இப் பகுதியில், கொண்டை கடலை விவசாயமே இல்லாமல் போய்விடும்.

**கோயம்பேடு மார்க்கெட்டில் மல்லிகைப் பூ கிலோ 1,300 ரூபாய்:சில்லறை வியாபாரிகள் ஓட்டம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 26,2010,03:22 IST

கோயம்பேடு:கோயம்பேடு மார்க்கெட்டில், தங்கத்தை மிஞ்சும் வகையில் கிலோ 1,300 ரூபாய்க்கு விற்கப்பட்டதால், அதனை வாங்கச் சென்ற சில்லரை வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் அதிர்ச்சியடைந்தனர்.கோயம்பேடு மார்க்கெட்டிற்கு கோயம்புத்தூர், நிலக்கோட்டை, அருப்புக்கோட்டை, மதுரை உள்ளிட்ட பகுதிகளில் இருந்தும், சென்னையை சுற்றியுள்ள பகுதிகளில் இருந்தும் மல்லிகைப் பூக்களின் வரத்து இருக்கும்கடந்த சில வாரங்களாக பெய்த கனமழை, அதனைத் தொடர்ந்து தொடரும் பனி ஆகியவற்றால்மல்லிகைப் பூக்களின் உற்பத்தியில் பாதிப்பு ஏற்பட்டது.

ஏற்கனவே மல்லிகைப் பூவின் சீசன் முடிந்து. அதன் வரத்து மார்க்கெட்டிற்கு குறைந்ததால், கடந்த வாரங்களில் அதன் விலை கிலோ ஒன்றுக்கு 300 ரூபாய் முதல் 400 ரூபாய் வரை விற்றன.மழை மற்றும் பனி பாதிப்பால் வரத்து பெருமளவு குறைந்தது. நேற்று கொண்டாடப்பட்ட கிறிஸ்துமஸ் பண்டிகையையொட்டி உற்பத்தி செய்யப்படும் இடங்களிலே விற்பனைக்கு மல்லிகைப் பூக்கள் போதுமான அளவு இல்லாததால், கோயம்பேடு மார்க்கெட்டிற்கு மல்லியின் வரத்து 90 சதவீதம் குறைந்தது.சென்னையை சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து மட்டுமே மல்லிகைப் பூக்கள் வரத்து இருந்தது. குறிப்பாக டன் கணக்கில் வந்துக் கொண்டிருந்த நிலையில், கடந்த இரண்டு நாட்களாக 40 முதல் 50 கிலோ வரையே வரத்து இருந்தன.

இதனால் அதன் விலையில் மிகப்பெரிய மாற்றம் ஏற்பட்டு கிலோ ஒன்றுக்கு 1,200 முதல் 1,300 ரூபாய் வரை விற்கப்பட்டது. மல்லிகைப் பூவுக்கு மாற்றாக வாங்கப்படும் ஜாதி பூ கிலோ 600 ரூபாய்க்கு விற்கப்பட்டது.மார்க்கெட்டில் மல்லிகைப் பூக்களை வாங்கச் சென்ற சில்லரை வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் விலையை கேட்டு அதிர்ச்சியடைந்தனர்.வேறு வழியில்லாமல் கிலோ 50 ரூபாய்க்கு விற்கப்பட்ட சாமந்தி பூக்களை அனைவரும் வாங்கிச் சென்றனர். ஏற்கனவே வெங்காயம், பூண்டு விலையில் மிரண்டுபோயுள்ள மக்கள் பூக்களின் விலையும் எகிறியதால் வருத்தமடைந்துள்ளனர்.விலை உயர்வு குறித்து கோயம்பேடு பூ மார்க்கெட் மொத்த வியாபாரி மூக்கையா கூறுகையில், ""மல்லிகைப் பூக்களின் உற்பத்தி குறைந்து மார்க்கெட்டிற்கு வரத்து

குறைந்ததால் அதன் விலை ஆயிரத்தை தாண்டியது.பனி குறைந்தால் மட்டுமே உற்பத்தி அதிகரித்து விலை படிப்படியாக குறைய வாய்ப்புள்ளது" என்றார்.

**பொங்கலுக்கு கரும்பு தயார்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 26,2010,01:34 IST

சிதம்பரம் : பொங்கல் பண்டிகைக்காக சிதம்பரத்தில் பன்னீர் கரும்பு வெட்டும் பணி தீவிரமாக நடந்து வருகிறது.
பொங்கல் பண்டிகைக்கு பயன்படுத்தப்படும் பன்னீர் கரும்பு, கடலூர் மாவட்டம் சிதம்பரம் அடுத்த வீராணம் பாசனப் பகுதிகளில் அதிகள வில் பயிரிடப்பட்டுள்ளன. ஒடாக்கநல்லூர், மதுராந்தகநல்லூர், வெள்ளியகுடி, வாக்கூர், முட்டம், வடக்குமாங்குடி, கருப்பூர், கொள்ளிடக்கரை கிராமங்களான வேளக்குடி, சாலியான்தோப்பு, பழையநல்லூர், அகரநல்லூர், கண்டியாமேடு, கடவாச்சேரி, வல்லம்படுகை உட்பட 15க்கும் மேற்பட்ட ஊர்களில் 3,000 ஏக்கருக்கும் மேல் பயிரிடப்பட்டுள்ளது. தற்போது பொங்கல் பண்டிகை நெருங்குவதையொட்டி கரும்பு வெட்டும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. இப்பகுதிகளிலிருந்து வெட்டப்படும் பன்னீர் கரும்புகள் லாரிகள், டிராக்டர்கள் மூலம் சென்னை கோயம்பேடு மார்க்கெட்டிற்கு அனுப்பப்பட்டு பின் அங்கிருந்து தமிழகம் முழுவதும் பல்வேறு மாவட்டங்களுக்கும் மற்றும் புதுச்சேரிக்கும் விற்பனைக்காக அனுப்பப்படும்.

**நடப்பு ஆண்டிற்கு கரும்பு டன்னுக்கு ரூ.1,900 முதுநிலை பொது மேலாளர் துரைசாமி தகவல்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 26,2010,01:30 IST

திட்டக்குடி : கரும்பு டன் ஒன்றுக்கு 1,900 ரூபாயும், வண்டி வாடகையும் ஆலை நிர்வாகமே ஏற்கும் என முதுநிலை பொது மேலாளர் தெரிவித்துள்ளார். திட்டக்குடி அடுத்த இறையூர் அம்பிகா சர்க்கரை ஆலையில் விவசாய சங்க நிர்வாகிகளுடன் கரும்பு விலை குறித்து அதிகாரிகளின் ஆலோசனைக் கூட்டம் நடந்தது. துணை பொது மேலாளர் செந்தில்குமார், முதன்மை மேலா ளர்கள் கார்த்திக்ராஜா, ஜானகிராமன் முன்னிலை வகித்தனர். துணை மேலா ளர் சிவனேசன் வரவேற்றார். கூட்டத்திற்கு தலைமை தாங்கிய முதுநிலை பொது மேலாளர் துரைசாமி பேசியதாவது: நடப்பு ஆண்டு பருவத்திற்கு அரைக்கப்படும் கரும்பு டன் 1க்கு 1,900 ரூபாய் வழங்கப்படும். இது கடந்த ஆண்டை விட 199 ரூபாய் கூடுதலான விலையாகும். இதனுடன் வண்டி வாடகையும் ஆலை நிர்வாகமே முழுமையாக ஏற்கும். இந்த அரவை பருவத்தில் 4 அடி மற்றும் 5 அடிக்கு மேல் இடைவெளியில் பயிர் செய்யப்பட்டுள்ள கரும்பினை அறுவடை செய்ய 6 கரும்பு அறுவடை இயந்திரங்கள் வாங்கப்பட்டுள்ளன. இயந்திரம் மூலம் கரும்பு அறுவடை செய்ய

தகுதியான அனைத்து வயல்களுக்கும் இயந்திரம் அனுப்பி வைக்கப்படும். சொட்டு நீர் பாசனம் மூலம் பயிரிடப்பட்டுள்ள 2,000 ஆயிரம் ஏக்கர் கரும்பு வயல்கள் கூடுதல் மகசூலுடன் அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது. இந்த தொழில் நுட்பத்தை ஊக்குவிக்கும் பொருட்டு ஏக்கருக்கு 13 ஆயிரம் ரூபாய் (முதல் ஆண்டு 4,000 ரூபாய், அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு 2,250 ரூபாய் வீதம் மகசூல் அடிப்படையில்) மற்றும் நிலத்தில் சொட்டு நீர்ப்பாசனம் அமைப்பவர்களுக்கு ஏக்கருக்கு 7,000 ரூபாய் (முதலாண்டு 2,500 ரூபாயும், அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு 1,500 ரூபாய் மகசூல் அடிப்படையில்) மானியமாக ஆலை நிர்வாகம் வழங்குகிறது. இதனுடன் அரசு அறிவித்துள்ள மானியமும் பெற்றுத்தர ஏற்பாடு செய்யப்படும். இவ்வாறு முதுநிலை பொது மேலாளர் துரைசாமி பேசினார்.

**ரூ.41 லட்சம் வேளாண் கருவிகள் வழங்கல்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 26,2010,01:41 IST

விழுப்புரம் : வேளாண் பொறியியல் துறை சார்பில் அரசு மானியத்துடன் கூடிய 41 லட்சம் ரூபாய் மதிப்பிலான வேளாண் கருவிகள் வழங்கப்பட்டது. விழுப்புரம் கலெக்டர் அலுவலகத்தில் நடந்த நிகழ்ச்சியில் கலெக்டர் பழனிசாமி தலைமை தாங்கி விவசாயிகளுக்கு வேளாண் கருவிகளை வழங்கினார். விவசாயிகள் 13 பேருக்கு நெல் அறுவடை இயந்திரமும், கரும்பு சோலைகளை தூளாக்கும் இயந்திரம், நாற்று நடும் இயந்திரம் தலா ஒருவருக்கும், களை எடுக்கும் கருவிகள் 3 பேருக் கும், இரண்டு பேருக்கு டிராக்டர்களும், 9 பேருக்கு சுழல் கலப்பைகளும், 14 பேருக்கு மின் மோட்டார்களும் என 41 லட்சம் ரூபாய் மதிப்பிலான இயந்திரங்கள் 12 லட்சத்து 38 ஆயிரம் ரூபாய் மானியத்துடன் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் டி.ஆர்.ஓ., வெங்கடாசலம், வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் காதர் மொய்தீன், உதவி செயற்பொறியாளர் ராதாகிருஷ்ணன், உதவி பொறியாளர்கள் சந்துரு, ரவீந்திரன், குமார், முரளி மற்றும் விவசாயிகள் கலந்துக் கொண்டனர்.

**தடுப்பணைகள் நிரம்பி அருவியாக கொட்டும் நீர்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 26,2010,02:40 IST

வாழப்பாடி: வாழப்பாடி அடுத்த அருநூற்றுமலை பகுதியில் பெய்த பருவ மழையால், பெலாப்பாடி மலை கிராமத்தில் தடுப்பணைகள் நிரம்பி வழிந்து, இரு ஆண்டுகளுக்கு பின் தண்ணீர் அருவியாய் கொட்டுகிறது. அதை கண்டு ரசிக்க ஏராளமானோர் குவிந்து வருகின்றனர்.வாழப்பாடி அடுத்த 20வது கி.மீ., தூரத்தில் சேலம் மற்றும் தர்மபுரி மாவட்டங்களை இணைக்கும் எல்லையாக

அருநூற்றுமலை அமைந்துள்ளது. பல நூறு சதுர மைல் பரப்பளவில் பரந்து கிடக்கும் மலைப்பகுதியில் அடர்ந்த காடுகளும், நீரோடைகளும் நிறைந்து காணப்படுகின்றன.அருநூற்றுமலை பகுதியில் இரு மாதமாக பெய்து வரும் பருவமழையால் வனப்பகுதி நீரோடைகள் வழிந்தோடி வருகின்றன. நீரோடைகளின் குறுக்கே அமைக்கப்பட்டுள்ள தடுப்பணைகள் நீர்வரத்து பெற்று நிரம்பி வழிகின்றன. தடுப்பணை நிரம்பி வழிவதால் வெளியேறும் தண்ணீர், பெலாப்பாடி மலைக்குன்றில் மேலிருந்து புழுதிக்குட்டை கிராமத்தின் வடகிழக்கு பகுதியில் நீர்வீழ்ச்சியாய் கொட்டுகிறது.இரு ஆண்டுகளுக்கு பின், அருநூற்றுமலைப் பகுதியில் இரு மாதங்களாக பெய்த பலத்த மழையால், பெலாப்பாடி வனப்பகுதி நீரோடைகள் நீர்வரத்து பெற்று வழிந்தோடி தடுப்பணை நிரம்பியதோடு, மலைக்குன்றில் இருந்து நீர்வீழ்ச்சியால் தண்ணீர் கொட்டி வருகிறது. அது குறித்து தெரியவந்ததால் ரம்மியமான நீர்வீழ்ச்சியின் அழகை கண்டு ரசிக்க சுற்றுப்புற கிராமங்களை சேர்ந்த ஏராளமானோர் படையெடுத்து வருகின்றனர்.

**விவசாயிகள் மகிழ்ச்சி கரியகோயில் அணை திறப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 26,2010,02:41 IST

வாழப்பாடி: வாழப்பாடி அடுத்த கல்ராயன் மலைப்பகுதியில் பெய்த பருவமழையால் நிரம்பி வழிந்த பாப்பநாயக்கன்பட்டி கரியகோயில் அணை நேற்று காலை பாசனத்திற்கு திறக்கப்பட்டது. பயிர் செய்ய வழி பிறந்ததால் அணைப்பாசன ஆயக்கட்டு விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

வாழப்பாடி அடுத்த பாப்பநாயக்கன்பட்டி கிராமத்தில் கல்ராயன் மலை அடிவாரத்தில் வெள்ளாற்றின் குறுக்கே கரியகோயில்அணை அமைந்துள்ளது. 53 அடி உயரத்தில்190 மில்லியன் கனஅடி தண்ணீர் தேங்கும். அந்த அணையில் இருந்து, பாப்பநாயக்கன்பட்டி, ஏழுப்புளி, பீமன்பாளையம், தும்பல், அய்யம்பேட்டை, இடையப்பட்டி, கத்திரிப்பட்டி ஆகிய கிராமங்களில் 3,600 ஏக்கர் நிலம் பாசனம் பெறுகிறது.

இரு ஆண்டுகளாக கரியகோயில் அணையின் முக்கிய நீர்பிடிப்பு பகுதியான கல்வராயன் மலையில்போதிய மழையில்லாதாதல், அணை முழு கொள்ளளவையும் எட்டவில்லை. இரு மாதங்களுக்கு முன்வரை 22 அடியில் மட்டுமே தண்ணீர் சேறும் சகதியுமாக தேங்கி கிடந்தது. இரு மாதங்களாக பெய்த பருவமழையால் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து நீர்மட்டம் படிப்படியாக உயர்ந்தது.

கடந்த நவம்பர் 21ம் தேதி அணை முழு கொள்ளளவையும் எட்டி நிரம்பி வழிந்தது. அதனையடுத்து அணையில் இருந்து வெள்ளாற்றில் உபரி நீர் திறக்கப்பட்டது. வெள்ளாற்று படுகை கிராமங்களில்

வறண்டு கிடந்த ஏரி, குளம், குட்டைகளிலும் தண்ணீர் நிரம்பியது.
இதற்கிடையே, அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விட வேண்டுமென பொதுப்பணித்துறை நீர்வள ஆதார அமைப்பு அதிகாரிகள் வாயிலாக அணைப்பாசன ஆயக்கட்டு விவசாயிகள் மாவட்ட நிர்வாகத்துக்கு வேண்டுகோள் விடுத்தனர். விவசாயிகளின் கோரிக்கை ஏற்று அணையில் இருந்து வலது மற்றும் இடது வாய்க்கால்களில் வினாடிக்கு தலா 20 கன அடி வீதம், 5 நாள் விட்டு பத்து நாட்கள் என மொத்தம் 30 நாட்களுக்கு சுழற்சி முறையில் தண்ணீர் திறந்து விட சேலம் கலெக்டர் சந்திரக்குமார் உத்தரவிட்டார்.
நேற்று காலை அணை வளாகத்தில் நடந்த விழாவில், ஏற்காடு தொகுதி எம்.எல்.ஏ., தமிழ்ச்செல்வன் அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விட்டார். விழாவில், ஆத்தூர் ஆர்.டி.ஓ., சிராஜ் உன்னிசா, பெத்தநாயக்கன்பாளையம் ஒன்றிய தி.மு.க., செயலாளர் முருகேசன், யூனியன் சேர்மன் ஆசைத்தம்பி, அணை உதவி பொறியாளர் சதீஸ்குமார் மற்றும் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.
பயிர் செய்ய வழிபிறந்ததால் அணைப்பாசன ஆயக்கட்டு விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**பனி பொழிவால் வெற்றிலை பாதிப்பு :ஆத்தூர் விவசாயிகள் கண்ணீர்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 26,2010,02:42 IST

ஆத்தூர்: ஆத்தூர் சுற்றுவட்டார பகுதிகளில் கடும் பனி பொழிவு காரணமாக வெற்றிலை சாகுபடி பாதித்துள்ளது. மேலும், வெற்றிலை வெளிர் நிறத்திலும், நோய் தாக்கம் மற்றும் விலை குறைவு காரணமாக விவசாயிகள் கண்ணீர் வடித்து வருகின்றனர்.ஆத்தூர், முல்லைவாடி, ராமநாயக்கன்பாளையம், கடம்பூர், பைத்தூர், கூலமேடு, மஞ்சினி, பெத்தநாயக்கன்பாளையம், நரசிங்கபுரம், செந்தாரப்பட்டி, கூடமலை, தம்மம்பட்டி, கருமந்துறை, தும்பல், ஏத்தாப்பூர் பகுதிகளில் மூவாயிரம் ஏக்கர் பரப்பளவில் வெற்றிலை சாகுபடி செய்யப்படுகிறது.ஆத்தூர் பகுதியில் கறுப்பு, வெள்ளை ரகம் வெற்றிலை கொடிகளை விவசாயிகள் அதிகளவில் பயிர் செய்து வருகின்றனர். இங்கு விளையும் கறுப்பு ரக வெற்றிலை காரம் மிகுந்தும் ருசியாக இருப்பதால் கோவை, கடலூர், சென்னை, விழுப்புரம், புதுச்சேரி, பெங்களூரு போன்ற நகர பகுதிகளுக்கு அதிகளவில் அனுப்பப்படுகிறது.மேலும், கறுப்பு ரக, "பீடா' எனும் சக்கை வெற்றிலை ராஜஸ்தான், மகாராஷ்டிரா மாநிலத்துக்கும், வெள்ளை ரகம் பெங்களூரு, குஜராத் போன்ற மாநிலங்களுக்கு கூடுதலாக வியாபாரிகள் வாங்கி செல்கின்றனர். கடந்த ஏப்ரல், மே மாதம் வாடல், செவட்டை, கொன்னை, சப்பாத்தி மற்றும் மாவு பூச்சி தாக்கம் காரணமாக வெற்றிலை மகசூல் பாதிக்கப்பட்டது.கடந்த மாதம் பெய்த கன மழையில் வெற்றிலை செடியில் காணப்பட்ட மாவு மற்றும் சப்பாத்தி பூச்சி தாக்கம் குறைந்தது. தொடர்ந்து வெற்றிலை உற்பத்தி அதிகரித்து

ஆத்தூர் வெற்றிலை மார்க்கெட்டுக்கு அதிகளவில் வெற்றிலை வரத்து இருந்தது.இந்நிலையில், கடும் பனி பொழிவு காரணமாக வெற்றிலை செடிகளில், நிறம் மாறியும், வளர்ச்சியில்லாமல் நோய் தாக்கத்திற்குள்ளாகி வருகிறது. அதனால் வெற்றிலை உற்பத்தி பாதிப்பு மற்றும் விலை குறைவு விவசாயிகளை கடும் வேதனையடைய செய்துள்ளது.ஆத்தூர் முல்லைவாடி விவசாயிகள் கூறியதாவது:கடந்த மே மாதத்தில் வெள்ளை ரக வெற்றிலை ஒரு கவுலி (100 வெற்றிலை) 50 ரூபாயும், ஒரு ஒத்து (60 கவுலி) 1,200 முதல் 1,800 ரூபாயும், கறுப்பு ரக வெற்றிலை கவுலி 50 ரூபாயும், ஒரு ஒத்து 2,500 ரூபாய் வரை விற்பனை இருந்தது. 400 முதல் 600 ரூபாய்க்கு விற்ற பீடா, கழிவு (சக்கை) வெற்றிலை ஒரு ஒத்து 3,000 ரூபாய் வரை விற்பனையானது.கடந்த மாதம் பெய்த பருவ மழையில் வெற்றிலை மகசூல் அதிகரித்தது. தற்போது மூடு பனி, உறை பனி என கடும் பனிப்பொழிவு காரணமாக வெற்றிலை வளர்ச்சி இல்லாமலும், நிறம் மாறியுள்ளதால் மகசூல் பாதித்துள்ளது.மேலும், பூச்சி மற்றும் நோய் தாக்கம் கட்டுப்படுத்த மருந்துகள் தெளித்தாலும் நோய் குறையவில்லை. ஒத்து ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையான கறுப்பு ரக வெற்றிலை, தற்போது ஒத்து 600 ரூபாய் என விலை குறைந்துள்ளது. அதனால் வெற்றிலை பறிக்கும் கூலி ஆட்களுக்கு கூலி கொடுக்க முடியாத நிலை உள்ளது. வெற்றிலை பயிருக்கு அரசு நிவாரணம் வழங்குவதில்லை.இவ்வாறு அவர்கள் கூறினர்.

**வேளாண் துறை திட்டம் குறித்த பட்டியல் தயார் செய்ய இணை இயக்குனர் உத்தரவு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 26,2010,02:15 IST

நாமக்கல்: "வேளாண் துறையில் மத்திய, மாநில அரசுகள் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து பட்டியல் தயார் செய்யும் பணியை, வரும் ஜனவரி 15ம் தேதிக்குள் முடிக்க வேண்டும்' என, வேளாண் துணை இயக்குனர் பிரபாகரன் தெரிவித்துள்ளார்.இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:வேளாண் துறையில் 2010-2011ம் ஆண்டு மாநிலத் திட்டங்கள், மத்திய, மாநிலத் திட்டம் மற்றும் மத்திய அரசு முழு நிதி உதவியுடன் செயல்படும் திட்டம் உள்ளிட்டவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அனைத்து திட்டங்களும் இனவாரியான மானியங்களுக்கு ஏற்ப பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு தேவைப்பட்டியல் கிராம வாரியாக தயாரிக்கப்பட்டு வருகிறது.பயனாளிகளுக்கு உரிய அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு வருகிறது. பல்வேறு திட்டங்களின் கீழ் இனவாரியாக தேவைப்படும் இடுபொருள் மையங்களில் இருப்பு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், நடமாடும் இடுபொருள் வழங்கும் மையங்களிலும், இருப்பு வைத்து இடுபொருள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.இந்தப் பணிகள் வரும் ஜனவரி 15ம் தேதிக்குள் முடிக்க வேண்டும். திட்டம் செயல்படுத்துவது பயனாளிகளுக்கு உரிய காலத்தில் சென்றடையும் வகையிலும், அவற்றை கண்காணிக்க கண்காணிப்பு அலுவலர்கள்

நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் வாரந்தோறும் சம்மந்தப்பட்ட வட்டாரங்களுக்கு சென்று பயனாளிகளுக்கு இடுபொருள் வழங்குவதை கண்காணிக்க உள்ளனர்.மேலும், வாரந்தோறும் விவசாயிகளுக்கு வழங்கப்படும் இடுபெருள் வாரந்திர அறிக்கையாக அனுப்பப்படும். உரிய பதிவேடுகள் பராமரிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதை உயர் அலுவலர்கள் தொடர்ந்து கண்காணிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கோகோ பயிருக்கு சொட்டு நீர் பாசனம் அமைக்க 65 சதவீதம் மானியம் வழங்கல்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 26,2010,02:16 IST

ராசிபுரம்: "கோகோ மற்றும் தென்னை மரங்களுக்கு சொட்டு நீர் பாசனம் அமைத்து கொள்ள 65 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது' என, வெண்ணந்தூர் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் பொறுப்பு தமிழ்ச்செல்வி தெரிவித்துள்ளார்.இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:தென்னந்தோப்பு அல்லது பாக்கு தோப்பு வைத்திருக்கும் விவசாயிகள் கோகோ எனும் மலைத்தோட்ட பயிரை பயிர் செய்யலாம். இச்செடியிலிருந்து அறுவடை செய்யப்படும் முதிர்ந்த காய்களில் கிடைக்கும் கொட்டைகளை சாக்லெட் தயாரிக்கும் கேட்பரீஸ் நிறுவனம் கொள்முதல் செய்து கொள்கிறது.கோகோ பயிரை தென்னந்தோப்பில் நான்கு மரங்களுக்கு நடுவில் ஒரு செடி வீதம் பயிர் செய்யலாம். ஒரு ஏக்கர் தென்னந்தோப்பில் 54 கோகோ செடிகளை ஊடு பயிராக பயிரிட்டு, கூடுதல் வருமானம் பெறலாம். கோகோ செடிகள் தோட்டக்கலைத் துறை மூலம் மானியத்தில் வழங்கப்படுகிறது.தற்போது பெய்துள்ள மழையை பயன்படுத்தி இந்த செடியை நடவு செய்து கொள்ளலாம். மேலும், கோகோ மற்றும் தென்னை மரங்களுக்கு சொட்டுநீர் பாசனம் அமைக்க 65 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கீழ்பவானி பாசனத்தில் நெல் அறுவடை விறுவிறுப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 26,2010,02:09 IST

கோபிசெட்டிபாளையம்: கோபி வட்டாரத்தில் மழை ஓய்ந்ததால், கீழ்பவானி பாசனப் பகுதியில் நெல் அறுவடை விறுவிறுப்பாக துவங்கியுள்ளது.நவம்பர் மாதம் பருவமழை மற்றும் புயல் சின்னம் காரணமாக தமிழகம் முழுவதும் பரவலாக நல்ல மழை பெய்தது. கோபி வட்டாரத்தில் நவம்பர் மாதத்தில் 550 மி. மீட்டர் மழை பெய்தது. கோபி அரக்கன் கோட்டை, தடப்பள்ளி, கீழ்பவானி பாசன பகுதிகளில் களை எடுத்தல், உரமிடுதல் மற்றும் அறுவடை உள்ளிட்ட விவசாயப் பணிகள் கடுமையாக பாதிக்கப்பட்டது. முற்றிய மஞ்சளை அறுவடை செய்ய முடியாமல் விவசாயிகள் பெரும் அவதிப்பட்டனர்.கோபி வட்டாரத்தில் பெய்த தொடர் மழையால் கீழ்பவானி பாசனப் பகுதியில் நெல் முற்றிய நிலையில் அறுவடை செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. சில நாட்களாக கோபி பகுதியில் மழை ஓய்ந்துள்ளது. கீழ்பவானி பாசனப் பகுதியில் நெல் அறுவடையை விவசாயிகள் துவக்கியுள்ளனர்.கூலியாட்கள் பற்றாக்குறை காரணமாக எந்திரங்கள் மூலம் நெல் அறுவடை துவங்கியுள்ளது. இன்னும் ஒரு சில நாட்களில் அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி பாசனப் பகுதியில் இரண்டாம் போகத்தில் சாகுபடி செய்யப்பட்ட நெல் அறுவடை துவங்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது. நெல் அறுவடை எந்திரத்துக்கு, கடந்த சீஸனில் ஒரு மணி நேரத்துக்கு 1,200 ரூபாய் வரை வாடகை இருந்தது. தற்போது 1,500 ரூபாயாக வாடகை உயர்ந்துள்ளது.

**விவசாயிகளுக்கு மானியம்வழங்கல்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 26,2010,02:11 IST

வெள்ளகோவில்: வெள்ளகோவில் வட்டாரத்தில் "ராஜராஜன்-1000' முறையில் நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு, தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில் இடுபொருட்கள் மற்றும் உபகரணங்கள் மானியமாக வழங்கப்படுகின்றன.வெள்ளகோவில் வட்டாரத்தில், புதுப்பை, முத்தூர் பகுதிகளில் ஆயிரம் ஹெக்டருக்கு மேற்பட்ட பரப்பில், "ராஜராஜன்-1000' முறையில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. அதிக மகசூல் தரும் இம்முறையை ஊக்குவிக்கும் வகையில், 3,000 ரூபாய் மதிப்பில் வேளாண் கருவிகள் மற்றும் இடுபொருட்கள் மானியமாக வழங்கப்படுகின்றன.

வெள்ளகோவிலில் 20, முத்தூரில் 50 விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது. மானியம் பெற, குறைந்தது ஒரு ஹெக்டர் பரப்பளவில் "ராஜராஜன்-1000' முறையில் சாகுபடி செய்திருக்க வேண்டும்.

**ஜனவரி துவக்கத்தில் அரிசி விலை குறைய வாய்ப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 26,2010,02:07 IST

ஈரோடு: கர்நாடகா நெல் வரத்து அதிகரிப்பு காரணமாக அரிசி விலை மூட்டைக்கு 100 ரூபாய் வரை வீழ்ச்சியடைந்துள்ளது. ஜனவரி துவக்கத்தில் அரிசி விலை மேலும் குறைய வாய்ப்புள்ளது என, வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

கர்நாடகா பகுதியில் இருந்து ஈரோட்டுக்கு அதிகளவில் நெல் வரத்தாகிறது. தமிழகத்தில் நெல் அறுவடை பணி முடிந்துள்ளதால் நெல் வரத்து அதிகரித்துள்ளது.புதிய ரக அரிசி விலை மூட்டைக்கு 100 ரூபாய் வரை வீழ்ச்சி அடைந்துள்ளது. பழைய ரக அரிசி விலை குறையவில்லை. 75 கிலோ மூட்டை டீலக்ஸ் பொன்னி 2,400 ரூபாய், 1,900 ரூபாய்க்கு விற்கப்பட்ட பி.பி.டி., ரக அரிசி 1,700 ரூபாய், 1,600 ரூபாய்க்கு விற்கப்பட்ட அதிசய பொன்னி புதிய ரகம் 1,500 ரூபாய், பழைய ரகம் 1,800 ரூபாய், ஐ.ஆர்., 20 புதிய ரகம் 1,350 ரூபாய் முதல் 1,400 ரூபாய், பழைய ரகம் 1,500, இட்லி அரிசி புதிய ரகம் 1,300 ரூபாய் முதல் 1350 ரூபாய், பழைய ரகம் 1,450 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.நெல் வரத்து தொடர்ந்து அதிகரிப்பதால், இன்னும் 15 நாட்களில் அரிசி விலை மேலும் குறைய வாய்ப்பு உள்ளது என வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.அரிசி வியாபாரி ஒருவர் கூறியதாவது:தமிழகம், கர்நாடகா பகுதியில் இருந்து நாங்கள் நெல் கொள்முதல் செய்து நெல் அரவை செய்து விற்பனை செய்கிறோம். சில வாரங்களுக்கு முன் கர்நாடகா டீலக்ஸ் நெல் வரத்து குறைந்து விட்டதால், மூட்டைக்கு 100 ரூபாய் அதிகரித்தது.கர்நாடகாவில் இருந்து நெல் வரத்து அதிகரித்து விட்டது. 16 முதல் 17 ரூபாய்க்கு வாங்கப்பட்ட ஒரு கிலோ நெல் 13 ரூபாயாக குறைந்துள்ளது. நெல் அரவை குடோன்களில் 2,000 மூட்டைகள் முதல் 10 ஆயிரம் மூட்டைகள் நெல் மூட்டைகள் தேங்கிக் கிடக்கிறது.

தேக்கமடைந்துள்ள மூட்டைகள் தற்போது அரவை துவங்கியுள்ளது. அரிசி விலை படிப்படியாக குறையத் துவங்கியுள்ளது. இன்னும் 15 நாட்களில் அரிசி வரத்து அதிகரிக்கும் என்பதால் விலை மேலும் வீழ்ச்சி அடைய வாய்ப்புள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

**பயிர்களுக்கு காப்பீடு திட்டம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 26,2010,02:06 IST

ஈரோடு: ரபி பருவத்தில் அனைத்து விதமான உணவு பயிர்கள் மற்றும் வருடாந்திர வணிக தோட்டக்கலை பயிர்களுக்கு பயிர் காப்பீடு செய்து விவசாயிகள் பயன் பெறலாம். ஈரோடு கலெக்டர் சவுண்டையா அறிக்கை:தேசிய வேளாண் காப்பீடு திட்டத்தின் கீழ், 2010-11ம் ஆண்டு ரபி பருவத்தில், ஈரோடு மாவட்டத்தில் நெல், கம்பு, சோளம், ராகி, மக்காச்சோளம் மற்றும் எண்ணெய் வித்துப் பயிர்கள், கொள்ளு, உளுந்து, பாசிப்பயறு, கரும்பு, வாழை, மரவள்ளி, வெங்காயம், உருளைக்கிழங்கு உள்ளிட்ட பயிர்களுக்கு காப்பீடு செய்யலாம்.விவசாயிகளுக்கு பிரிமீயத் தொகையில் 50 சதவீத மானியமும், கடன் பெறாத சிறு, குறு விவசாயிகளுக்கு 55 சதவீத மானியமும், கடன் பெறாத இதர விவசாயிகளுக்கு 50 சதவீத மானியமும்

வழங்கப்படும்.ஒவ்வொரு பயிருக்கும் காப்பீடு பிரிமீயம் செலுத்த அறிவிக்கை செய்யப்பட்டுள்ள பிர்கா மற்றும் எவ்வளவு பிரிமியம் செலுத்த வேண்டும் போன்ற விபரங்கள் சம்பந்தப்பட்ட வேளாண் விரிவாக்க மையத்தில் பெறலாம்.

**கால்நடைக்கு நோயை தடுக்கஇயற்கை மூலிகை மருத்துவம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 26,2010,23:36 IST

திருப்பூர்:கால்நடைகளுக்கு ஏற்படும் நோயை தடுக்கும் நடவடிக்கை மற்றும் தடுப்பு முறையின் ஒரு பகுதியாக தடுப்பூசியை தவிர்த்து, இயற்கையோடு ஒன்றிணைந்த மூலிகை பொருட்களை பயன்படுத்த, கால்நடை பல்கலை டாக்டர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.வளர்ந்து வரும் தொழில் வளர்ச்சி, குறைந்த முதலீட்டில் அதிக லாபம் தரும் தொழில்களின் மீது நாட்டம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால், கால்நடை வளர்ப்புத்தொழில் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருகிறது. கிராமங்களில் சில இடங்களில் மட்டுமே கால்நடை வளர்ப்பு பிரதான தொழிலாக உள்ளது. தற்போதைய வளர்ப்பும் அழிந்து விடாமல் இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில், கால்நடை பல்கலை மருத்துவமனை, கால்நடை வளர்ப்பு குறித்து ஆலோசனை முகாம்கள், தடுப்பூசி குறித்து பயிற்சிகளை வழங்கி வருகிறது.விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்பாளர்கள் பலர், மாடுகள், செம்மறி ஆடுகளுக்கு கால்நடை தடுப்பூசி போட முகாம்களுக்கு அழைத்து வர, வாகன வசதியில்லாத நிலையில் உள்ளனர். எனவே, தடுப்பூசியை தவிர்த்து, குறிப்பிட்ட சில நோய்களுக்கு, இயற்கை மூலிகை மருத்துவம் மூலம் தீர்வு காண முடியும் என கால்நடை பல்கலை கண்டறிந்தது; இதற்கான ஆய்வும் நடத்தப்பட்டது.

முதல்கட்டமாக, மாடுகளை அதிகம் தாக்கும் கோமாரி என்ற வாய்ச்சப்பை நோயை மூலிகை மருந்துகளால் குணப்படுத்த முடியும் என கண்டறிந்தது. இதற்கு மூலிகை மருந்து தயாரிக்கும் முறையை தனியார் தொண்டு நிறுவனம் உதவியுடன் கால்நடை வளர்ப்பாளர்களுக்கு எடுத்துரைக்கப்பட உள்ளது.கால்நடை பல்கலை டாக்டர்களிடம் கேட்ட போது,"கோமாரி ஒரு நச்சுயிரி நோய்; இது, முதலில் மாட்டை தாக்கும்; பின், பன்றி, ஆடுகளை தாக்கும். வாய் மற்றும் நாக்கில் கொப்பளம் ஏற்படும். காலில் புண் ஏற்பட்டு வீக்கம் உண்டாகும். இந்நோயை தடுக்க 50 கிராம் சீரகம், 30 கிராம் வெந்தயம், 10 கிராம் மஞ்சள் பொடி, கருப்பட்டி 20 கிராம் ஆகிய நான்கையும் அரைத்து, ஒரு தேங்காயுடன் சேர்த்து கொடுக்க வேண்டும்.காலில் ஏற்படும் புண் ஆற, 100 கிராம் குப்பை மேனி, பூண்டு 10, மஞ்சள் 10 கிராம் ஆகிய மூன்றை 250 கிராம் இலுப்பை எண்ணெயில் தேய்த்து, புண் ஏற்பட்டுள்ள இடத்தில் தடவ வேண்டும். ஏற்கனவே தடுப்பூசி போட்டு கொண்ட கால்நடைகளுக்கும் இத்தகைய மூலிகை மருந்துகளை கொடுக்கலாம்,' என்றனர்.

## மஞ்சள் நோயை கட்டுப்படுத்தஒட்டுதிரவம் பயன்படுத்தலாம்

பதிவு செய்த நாள் : டிசம்பர் 26,2010,23:41 IST

திருப்பூர்:மஞ்சள் செடியை தாக்கி வரும் பூச்சியை முழுமையாக கட்டுப்படுத்த, பூச்சிக்கொல்லி மருந்துடன் ஒட்டு திரவத்தை பயன்படுத்த தோட்டக்கலைத்துறை ஆலோசனை வழங்கியுள்ளது.கடந்தாண்டு மஞ்சள் நல்ல விலைக்கு விற்றதை தொடர்ந்து, இந்தாண்டு மஞ்சள் பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வமுடன் ஈடுபட்டனர். தண்ணீர் வசதிக்கேற்ப, பரப்பளவையும் அதிகப்படுத்தினர். வடகிழக்கு பருவ மழை துவங்கும் முன், தண்ணீர் பற்றாக்குறையால் வாடல் நோய் தாக்கியது. மழையால் நிலத்தடி நீர்மட்டம் அதிகரித்ததால், அழுகல் நோய் பரவி வருகிறது. மேலும், பூச்சி தாக்குதல் மற்றும் இலை கருகல் நோயும் தொடர்கிறது.நல்ல விலை கிடைக்கும் நேரத்தில், நோய் தாக்குதல் ஏற்படுவது விவசாயிகளை கவலை கொள்ளச் செய்துள்ளது. திருப்பூர் சுற்றுப்பகுதியில், பரவலாக நோய் தாக்குதல் இருக்கிறது. சில விவசாயிகள், பூச்சி மருந்து தெளித்து, பேனை கட்டுப்படுத்துகின்றனர்.

அதிகம் தாக்கிய பகுதியில் பேன் பூச்சியை முழுமையாக அழிக்க முடிவதில்லை.தோட்டக்கலைத்துறை அதிகாரி கூறியதாவது:பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த, பூச்சிக்கொல்லி மருந்துடன் ஒட்டு திரவம் கலந்து தெளிக்க வேண்டும். ஒரு டேங்க் மருந்துக்கு 6 மி.லி., ஒட்டு திரவத்தை பயன்படுத்தினால், மருந்தின் பயன் 50 சதவீதம் அதிகரிக்கும். செடிகளில் மருந்து நன்றாக ஒட்டுவதால், பூச்சிகள் இறக்கின்றன. மழைநீர் தேங்கி நிற்பதால், அழுகல் நோய் தாக்குகிறது. வேர் அழுகல் நோய் அதிகளவில் தாக்கிய செடிகளை உடனடியாக அகற்ற வேண்டும்.ஒரு லிட்டர் தண்ணீரில், காப்பர் ஆக்சி குளோரைடு 2 கிராம் அல்லது மேங்கோசெப் 3 கிராம் அளவில் கலக்க வேண்டும். கரைசலை வேர் அருகில் மற்றும் பாதிக்கப்பட்ட செடியை சுற்றிலும் ஊற்ற வேண்டும். ஒரு லிட்டர் தண்ணீரில் பவிஸ்டின் இரண்டு கிராம் கலவை தெளிக்கலாம். அடுத்த 10 நாட்களில் மருத்து அளித்தல் பயன் தரும். தொழு உரத்துடன், டி.விரிடி உயிரியல் ரசாயன கொல்லியை கலக்க வேண்டும். அடுத்த முறை மஞ்சள் பயிரிடும்போது, விதை நேர்த்தி செய்தல் மற்றும் தடுப்பு மருந்து பயன்படுத்துவதில் விவசாயிகள் கவனம் செலுத்த வேண்டும், என்றார்.

## கொத்தமல்லி திடீர் விலை உயர்வு: விவசாயிகள் மகிழ்ச்சி

பதிவு செய்த நாள் : டிசம்பர் 26,2010,23:27 IST

உடுமலை:கொத்தமல்லியின் விலை ஓராண்டுக்கு பிறகு உயர்ந்துள்ளதால் இருப்பு வைத்த விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.உடுமலை மற்றும் சுற்றுப்பகுதிகளில், மானாவாரியாக கொத்தமல்லி பயிரிடப்படுகிறது. கடந்தாண்டு நவ., மாதத்தில் பயிரிடப்பட்ட கொத்தமல்லி சாகுபடி போதிய மழை இல்லாமல் பாதிக்கப்பட்டது. விளைச்சல் குறைந்த நிலையில், 40 கிலோ கொண்ட மூட்டை 1,200 ரூபாயாக விலை சரிந்தது.இதனால், விவசாயிகள் கொத்தமல்லியை விற்பனை செய்யாமல் இருப்பு வைத்தனர். பல மாதங்களாக விலை அதிகரிக்காததால் பிப்., மாதம் முதல் ஒழுங்கு முறை விற்பனை கூடங்களில் இருப்பு வைக்கப்பட்டிருந்த கொத்தமல்லியை குறைந்த விலைக்கே விவசாயிகள் விற்பனை செய்தனர். சில பகுதிகளில் மட்டும் குறைந்தளவு கொத்தமல்லி இருப்பு வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், ஓராண்டிற்கு பிறகு கொத்தமல்லியின் விலை திடீரென உயர்ந்துள்ளது. கடந்த சில நாட்களாக 40 கிலோ மூட்டையின் விலை ஆயிரம் ரூபாயிலிருந்து 2 ஆயிரம் ரூபாயாக அதிகரித்துள்ளது. ஆந்திரா போன்ற மாநிலங்களிலிருந்து கொத்தமல்லி வரத்து பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், கொத்தமல்லியை அதிகளவு கொள்முதல் செய்யும் மசலா தயாரிப்பு நிறுவனங்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு விலை அதிகரித்து வருவதாக வியாபாரிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.வேளாண்விற்பனை வாரிய அதிகாரிகள் கூறுகையில், உடுமலை மற்றும் சுற்றுப்பகுதிகளில் கடந்த சீசனில் அறுவடை செய்யப்பட்ட கொத்தமல்லி தற்போது அதிகளவு இருப்பு இல்லை. ஒரு சில விவசாயிகள் குறைந்தளவு தோட்டங்களில் இருப்பு வைத்துள்ளனர். இந்தாண்டிற்கான சீசனில் பயிரிடப்பட்ட கொத்தமல்லி அறுவடைக்கு தயாராகவில்லை. எனவே சில மாதங்களுக்கு விலை குறைய வாய்ப்பில்லை' என்றனர். நல்ல விலை கிடைப்பதற்காக கொத்தமல்லியை ஓராண்டாக இருப்பு வைத்திருந்த விவசாயிகள் விலையேற்றத்தால் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## தாந்தோணி வட்டாரத்தில் ராஜராஜன் 1000 நெல் சாகுபடி செயல்விளக்க திடல் ஆய்வு

பதிவு செய்த நாள் : டிசம்பர் 26,2010,23:35 IST

கரூர்: தாந்தோணி வட்டாரத்தில் நடப்பாண்டு 1,350 ஹெக்டர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. 900 ஹெக்டர் பரப்பளவில் பயறு வகைகளும், 1,000 ஹெக்டர் பரப்பளவில் எண்ணெய் வித்து பயிரும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.
தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம், ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தித் திட்டம் மற்றும் தீவிர பயறு சாகுபடித் திட்டத்தின் கீழ் 100 ஹெக்டர் பரப்பளவில் ராஜராஜன் 1000 மற்றும் துவரை செயல்விளக்கத்திடல்கள் அமைப்பதுக்கு முற்றிலும் இலவசமாக இடுபொருள் விவசாயிகளுக்கு

வழங்கப்பட்டுள்ளன. வேளாண் துணை இயக்குனர் சவுந்திரம் இத்திட்டங்களை ஆய்வு செய்யும் பொருட்டு, கொடையூர், தம்மநாயக்கன்பட்டி, கந்தசாரப்பட்டி மற்றும மூக்கணாங்குறிச்சி ஆகிய பகுதிகளில் உள்ள ராமலிங்கம், நடராஜன், கதிர்வேல், ராமச்சந்திரன்,பாலுசாமி, தண்டபாணி, பழனி, செங்கோடகவுண்டர், சிவசாமி, பழனிசாமி, தமிழரசி மற்றும் வேம்பரசி ஆகிய விவசாயிகளின் வயல்களில் அமைக்கப்பட்டுள்ள ராஜராஜன் 1000 நெல் சாகுபடி முறை செயல்விளக்கத்திடல்களை பார்வையிட்டனர்.

விவசாயிகள் அனைவரும் வேளாண்துறை மூலம் பரிந்துரை செய்யப்பட்ட அறிவுரைகளை பின்பற்றி கோனோவீடர் களையெடுக்கும் கருவியின் மூலம் களையெடுத்தல், ஒரு குத்துக்கு 45 முதல் 50 தூர்கள் வெடித்து மகசூல் அதிகரித்துள்ளதாக விவசாயிகள் கூறினர். தேசிய வேளாண் வளர்ச்சித்திட்டத்தின் கீழ் துவரை செயல்விளக்கத்திடல்கள் அமைப்பதுக்கு 5ஆயிரம் ரூபாய் மானியத்தில் இலவச இடுபொருள் என 60 விவசாயிகளுக்கு ஒரு லட்சம் ரூபாய் மதிப்பில் வழங்கப்பட்டது. வேளாண் துணை இயக்குனர் சவுந்திரம் கந்தசாரப்பட்டி மற்றும் மூக்கணாங்குறிச்சி கிராமத்தில் பழனிசாமி, மகாலட்சுமி மற்றும் சிவசாமி வயல்களில் அமைக்கப்பட்டுள்ள துவரை செயல்விளக்கத்திடல்களை ஆய்வு செய்து துவரையில் பூக்கள் உதிர்வதை தடுத்து அதிக காய்கள் பிடித்து மகசூல் அதிகரிக்க இலைவழி உரமாக டி.ஏ.பி. கரைசல் தெளிக்க அறிவுரை வழங்கினர். தாந்தோணி வேளாண் உதவி இயக்குனர் (பொ) கவிதா, துணை வேளாண் அலுவலர் பிச்சைமுத்து, வேளாண் அலுவலர் ஜெயபாரதி உட்பட பலர் உடனிருந்தனர்.

**நெற்பயிரில் நோய் தாக்குதல் குறித்து முதல்வரிடம் புகார் : ராமசாமி எம்.எல்.ஏ.,**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 26,2010,22:31 IST

திருவாடானை : ""திருவாடானை தாலுகாவில் நெற்பயிரில் நோய் தாக்குதல் குறித்து முதல்வரிடம் புகார் செய்யபடும்,'' என,ராமசாமி எம்.எல்.ஏ., கூறினார்.

திருவாடானை பண்ணவயலில் சமுதாயகூடம் திறப்பு விழா நடந்தது. பி.டி.ஓ. ராமச்சந்திரன் வரவேற்றார். ஊராட்சி தலைவர் மகாலிங்கமூர்த்தி தலைமை வகித்தார். ஒன்றிய கவுன்சிலர் குமார் முன்னிலை வகித்தார். ஒன்றிய தலைவர் மேகலா, மாவட்ட கவுன்சிலர்கள் ரவி, மரகதம் மற்றும் பலர் கலந்து கொண்டனர். கட்டடத்தை திறந்து வைத்து எம்.எல்.ஏ. ,பேசியதாவது:திருவாடானை தாலுகாவில் நெற்பயிரில் குலை நோய் தாக்குதல் அதிகமாக உள்ளது. இதனால் விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டம் ஏற்பட்டுள்ளது. அரசு தக்க நடவடிக்கை எடுத்து, பாதிக்கபட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கவேண்டும். பாதிப்பு குறித்து முதல்வரிடம் நேரில் புகார் செய்யஉள்ளேன், என்றார்.

**வேளாண் இயந்திரமயமாக்கல்விவசாயிகளுக்கு பயிற்சி**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 26,2010,03:07 IST

தூத்துக்குடி:முடிவைத்தானேந்தல் கிராமத்தில் வேளாண்மை பொறியியல் துறை மூலம் வேளாண் இயந்திரமயமாக்கல் குறித்த விவசாயிகள் பயிற்சி நடந்தது.
விவசாயிகள் பயிற்சியை தூத்துக்குடி உதவி செயற்பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை அமுதன் துவக்கி வைத்து இத்துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து விளக்கி கூறினார். பயிற்சியின் போது கிள்ளிகுளம் வேளாண் கல்லூரி, மண் மற்றும் பயிர்கள் துறையினர் நெற்சாகுபடி முறையையும், வேளாண்மை பொறியியல் துறையினர் வேளாண் இயந்திரங்கள் குறித்த பயன்பாட்டையும் தோட்டக்கலை பயிர்கள் மற்றும் மலர் சாகுபடியில் உயர் தொழில்நுட்பம் குறித்தும் விளக்கி கூறினர். நவீன வேளாண்கருவிகள் மற்றும் தெளிப்பான்கள் குறித்து செயல் விளக்கம் அளிக்கப்பட்டது.

சொட்டுநீர் பாசனம் குறித்த பயிற்சியும், பின்னர் அடைக்கலாபுரம் விவசாயின் தோட்டத்தில் நேரடி விளக்கமும் செய்து காண்பிக்கப்பட்டது. மேலும் கிள்ளிகுளம் வேளாண் கல்லூரிக்கு அழைத்துச் சென்று நவீன சாகுபடி முறைகள் குறித்து விளக்கப்பட்டது. மேலும் கால்நடை வளர்ப்பு மற்றும் பராமரிப்பு முறைகளை பேரூரணி கால்நடை டாக்டர்களும், சித்த மருத்துவம் மற்றும் மூலிகை மருத்துவம் குறித்து சித்தா டாக்டர்களும் விளக்கம் அளித்தனர். பயிற்சி ஏற்பாடுகளை தூத்துக்குடி உதவி பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை திவ்யநாதன் செய்திருந்தார்.
உதவி செயற்பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை அமுதன் சான்றிதழ் வழங்கினார்.

**வேளாண் செயல்பாடுகள் வல்லுனர்கள் சந்திப்பு**

டிசம்பர் 26,2010,00:00 IST

திருக்கனூர் : திருக்கனூரில் வேளாண் செயல்பாடுகள் குறித்து வல்லுனர்கள் சந்திப்பு கூட்டம் நடந்தது. புதுச்சேரி, வேளாண் துறையின் வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை சார்பில் கார்த்திகை மற்றும் தை பருவ வேளாண் செயல்பாடுகள் பற்றிய விவசாயிகள் மற்றும் வல்லுனர்கள் சந்திப்பு கூட்டம் திருக்கனூர் உழவர் உதவியகத்தில் நடந்தது. கூடுதல் வேளாண் இயக்குனர் ரவிபிரகாசம் தலைமை தாங்கினார். வில்லியனூர் பயிற்சி வழி தொடர்புத் திட்ட இணை வேளாண் இயக்குனர் பாஸ்கரன் முன்னிலை வகித்தார். திண்டிவனம் எண்ணெய் வித்து

ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் அன்புமணி , வைத்தியநாதன் ஆகியோர் உளுந்து மற்றும் காய்கறி வளர்ப்பில் பயன்படுத்தப்படும் உரங்கள், வளர்ப்பு முறைகள் குறித்து விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கினர். காமராஜர் வேளாண் அறிவியல் நிலைய பூச்சியியல் துறை வல்லுனர் கிருஷ்ணகுமார், வேளாண் மற்றும் திட்ட அலுவலர் வினோத்கண்ணன், திருக்கனூர் வேளாண் அலுவலர் தினகரன் ஆகியோரும் ஆலோசனைகள் வழங்கினர். விவசாயிகளின் சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.

**கொலக்கம்பை பகுதிகளில் கடும் உறைபனியால் தேயிலை செடிகள் கருகும் அபாயம்**



கொலக்கம்பை பகுதிகளில் கடும் உறைபனி கொட்டுவதால் தேயிலை செடிகள் கருகி வருவதை படத்தில் காணலாம்.

கொலக்கம்பை, டிச.27–
கொலக்கம்பை பகுதியில் கடும் உறைபனி கொட்டுவதால் தேயிலை செடிகள் மற்றும் மேராக்காய் கொடிகள் கருக ஆரம்பித்துள்ளன.

மழை

கொலக்கம்பை மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளான தூதூர்மட்டம், சேலாஸ், உலிக்கல், ஆர்செடின், மஞ்சக்கொம்பை, அதிகரட்டி உள்ளிட்ட பகுதிகளில் கடந்த மாதம் இறுதி வரை பலத்த மழை பெய்து வந்தது.
தற்போது கடந்த 2 வாரமாக மழை ஓய்ந்து பகல் நேரங்களில் சமவெளி பகுதிகளுக்கு ஈடாக கடுமையான வெயிலும், மாலை 3 மணி முதல் மறுநாள் காலை 10 மணி வரை கடுமையான உறை பனியும் நிலவி வருகிறது.

உறை பனி

கடுமையான உறை பனியினால் அதிகாலை நேரங்களில் பொது மக்கள், தேயிலை தோட்ட தொழிலாளர்கள், பள்ளி மாணவர்கள் என அனைத்து தரப்பு மக்களும் வீட்டை விட்டு வெளியே வர முடியாத நிலையில் உள்ளனர்.
மேலும் காலை நேரங்களில் வாகனங்களில் உள்ள பெட்ரோல், டீசல் உறைந்து விடுவதால் வாகனங்கள் 'ஸ்டார்ட்' ஆவதில்லை. இதனால் வாகன ஓட்டிகள் வாகனங்களை நெருப்பு காண்பித்து சூடாக்கியும், தள்ளியும் வாகனங்களை இயக்கி வருகின்றனர்.

கருகும் மேராக்காய்

*கொலக்கம்பை பகுதிகளில் பெரும்பாலான விவசாயிகள் மேராக்காய் விவசாயம் செய்து வருகின்றனர். தற்போது இப்பகுதிகளில் நிலவும் உறைபனியால் மேராக்காய் கொடிகள் கருக தொடங்கி உள்ளன. மேரக்காய் கொடி கருகியதால் குறைந்த அளவே மகசூல் உள்ளது. இங்கு விளைவிக்கப்படும் மேராக்காய்கள் மேட்டுப்பாளையம் மொத்த காய்கறி மண்டிக்கு கொண்டு சென்று விற்பனை செய்து வருகின்ற னர்.*

*நல்ல விலை*

*தற்போது குறைந்த அளவே மேராக்காய் வரத்து உள்ளதால், கிலோ ஒன்று ரூ.20 முதல் ரூ.25 வரை நல்ல விலை கிடைக்கிறது. இந்த விலை போதுமானதாக இருந்தாலும் கூட கடும் உறைபனியால் மேராக்காய் செடிகள் பெரும்பாலானவை கருகி விட்டதால் மகசூல் பெருமளவு குறைந்து விட்டதாக விவசாயிகள் கவலையுடன் கூறுகின்றனர். மேலும் நீரோடை பகுதியின் அருகில் உள்ள மற்றும் தாழ்வான பகுதியில் உள்ள தேயிலை செடிகள் கடும் உறைபனியால் கருக தொடங்கி உள்ளன. இதனால் இப்பகுதியில் உள்ள தேயிலை தோட்ட எஸ்டேட்டுகளில் வாரம் 2 நாள், 3 நாட்கள் மட்டுமே தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டு வருகிறது.*

*இதே போன்று தொடர்ந்து உறைபனி கொட்டினால் காய்கறி செடிகள் மற்றும் தேயிலை செடிகள் முற்றிலும் கருகி விடும் என்று விவசாயிகள் வேதனையுடன் தெரிவித்தனர்.*

## நடப்பு வேளாண் பருவத்தில் கோதுமை பயிரிடும் பரப்பளவு 11.08 லட்சம் ஹெக்டேர் அதிகரிப்பு



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*நடப்பு வேளாண் பருவத்தில், நம் நாட்டில் கோதுமை பயிரிடப்படும் பரப்பளவு 11.08 லட்சம் ஹெக்டேர் அதிகரித்து 2.64 கோடி ஹெக்டேராக உயர்ந்துள்ளது. இது, சென்ற ஆண்டில் 2.53 கோடி ஹெக்டேராக இருந்தது.*

*பருப்பு வகைகள்*

*இதேபோன்று எண்ணெய் வித்துக்கள் மற்றும் பருப்பு வகைகள் பயிரிடும் பரப்பளவும் அதிகரித்துள்ளது. இதனால் இவற்றின் உற்பத்தி உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. நாட்டில் உணவு பொருள்களுக்கான பணவீக்கம் அதிகரித்து வரும் நிலையில், இது மகிழ்ச்சி தரக்கூடிய செய்தியாகும்.*

*குளிர்கால பயிரான கோதுமை வடமாநிலங்களில்தான் அதிக அளவில் பயிர்*

செய்யப்படுகிறது. கோதுமை உற்பத்தியில் உத்தரபிரதேச மாநிலம் முன்னிலையில் உள்ளது. இம்மாநிலத்தில், கோதுமை பயிரிடும் பரப்பளவு நடப்பு ஆண்டில் 6 லட்சம் ஹெக்டேர் அதிகரித்து 94.31 லட்சம் ஹெக்டேராக உள்ளது.

பஞ்சாப் – அரியானா

இதற்கு அடுத்தபடியாக பஞ்சாப் மற்றும் அரியானா ஆகிய மாநிலங்களில் அதிக அளவில் கோதுமை பயிர் செய்யப்படுகிறது. இம்மாநிலங்களில் கோதுமை பயிரிடும் பரப்பளவு முறையே 35 லட்சம் ஹெக்டேர் மற்றும் 24 லட்சம் ஹெக்டேராக உள்ளது. அதேசமயம், நடப்பு பருவத்தில், நெல் பயிரிடும் பரப்பளவு சற்று குறைந்துள்ளது. இருப்பினும் கையிருப்பு போதுமான அளவிற்கு உள்ளது.

## வெங்காயம் விலையை கட்டுக்குள் கொண்டு வருவோம் பிரணாப் முகர்ஜி உறுதி

கொல்கத்தா, டிச.27–

கொல்கத்தா வந்த மத்திய நிதி மந்திரி பிரணாப் முகர்ஜியிடம் வெங்காய விலை உயர்வு பற்றி நிருபர்கள் கேட்டனர். அப்போது அவர் கூறியதாவது:–

வெங்காயத்தின் விலை உயர்வை தடுக்க, இறக்குமதி செய்யப்படும் வெங்காயத்தின் மீதான வரி ரத்து செய்யப்பட்டு உள்ளது. மேலும் ஏற்றுமதிக்கும் தடை விதிக்கப்பட்டு இருக்கிறது.

மத்திய அரசு எடுத்த இந்த நடவடிக்கையின் மூலம் வெங்காயத்தின் விலை குறைய தொடங்கி விட்டது. இன்னும் அண்டை நாடுகளில் இருந்து வெங்காயத்தை கூடுதலாக இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

எனவே விரைவில் வெங்காயத்தின் விலை கட்டுக்குள் வந்து விடும். வெங்காயத்தின் விலை உயர்ந்ததற்கு மழையால் ஏற்பட்ட பயிர் சேதமும், பதுக்கல் பேர்வழிகளும்தான் காரணம். வெங்காயத்தை பதுக்கிவைப்போர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். வெங்காயத்தின் உற்பத்தியை பெருக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு பிரணாப் முகர்ஜி கூறினார்.

## வரலாறு காணாத விலை உயர்வு: கோவையில், மல்லிகைப்பூ கிலோ ரூ.1000–க்கு விற்பனை

கோவை,டிச.27–

கோவையில் இதுவரை இல்லாத அளவிற்கு மல்லிகைப்பூ வரலாறு காணாத விலை உயர்வு ஏற்பட்டுள்ளது. மார்க்கெட்டுகளில் கிலோ ரூ.1000–க்கும், முழம் ரூ.40–க்கும் விற்பனையானது.

மழை–வரத்து குறைவு

கடந்த சில நாட்களாக மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் காய்கறி விலை கடுமையாக

*உயர்ந்து உள்ளது. அதன் தொடர்ச்சியாக பூக்களின் விலையும் 'கிடுகிடு' வென உயர்ந்து வருகிறது. அதன்படி இதுவரை இல்லாத அளவுக்கு மல்லிகைப்பூ விலை கிலோவுக்கு ரூ.1000–க்கும், முழம் ரூ.40–க்கும் விற்பனையானது.*

*கோவை பூ மார்க்கெட்டுக்கு நிலக்கோட்டை, திண்டுக்கல், கொடைக்கானல், ஏற்காடு, செங்குன்றம், ஈரோடு, சத்தியமங்கலம், ஊட்டி மற்றும் உள்ளூரில் பல்வேறு இடங்களில் இருந்து பூக்கள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன. தமிழ்நாட்டில் பரவலாக பெய்த மழை காரணமாக பூச்செடிகள் அழுகி அழிந்து பற்றாக்குறை ஏற்பட்டது. மார்க்கெட்டுகளுக்கு வரத்தும் குறைந்தது.*

*மல்லிகைப்பூ கிலோ ரூ.1000*

*இதனால் கோவை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களுக்கு பூக்கள் குறைந்த அளவே விற்பனைக்கு வந்துள்ளதால் கடும் விலை உயர்வு ஏற்பட்டு உள்ளது. மேலும், சபரிமலைக்கு செல்லும் பக்தர்களுக்கு பூஜைகள் செய்வதற்கு பூக்களின் தேவை அதிகமாக உள்ளது என்பதும் விலை உயர்வுக்கு ஒரு காரணம் ஆகும். கோவையில் மல்லிகை பூ கிலோ ரூ.1000–க்கு விற்கப்படுவது இதுவே முதல்முறையாகும். இதற்கு முன் ரூ.800–க்கு விற்பனையானதே அதிகமாக இருந்தது என்று வியாபாரி ஒருவர் தெரிவித்தார்.*

*கோவை பூ மார்க்கெட்டில் நேற்று விற்பனையான பூக்கள் மற்றும் விலை(கிலோவுக்கு) விவரம் வருமாறு:–*

*கடந்த மாதம் ரூ.500–க்கு விற்பனையான மல்லிகைப்பூ நேற்று காலை ரூ.1000–க்கு விற்பனையானது. ஜாதிமல்லி ரூ.600 முதல் ரூ.700–க்கும், அரளி ரூ.300–க்கும், சம்பங்கி ரூ.100–க்கும், செவ்வந்தி ரூ.100–க்கும், கனகாம்பரை ரூ.250–க்கும், காக்கடா ரூ.200–க்கும், தாமரைப்பூ ஒன்று ரூ.10 முதல் ரூ.15–க்கும் விற்பனையானது.*

## கூடலூர்– முதுமலை சாலையில் வாகனம் மோதி ஆண் கடமான் பலி



கூடலூர்–முதுமலை சாலையில் வாகனம் மோதி இறந்த கடமானை வனத்துறை அதிகாரி பார்வையிட்ட காட்சி.

கூடலூர் ,டிச.27–

கூடலூர்– முதுமலை புலிகள் காப்பக சாலையில் அடையாளம் தெரியாத வாகனம் மோதி 15 வயதான ஆண் கடமான் பலியானது. இது குறித்து முதுமலை வனத்துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

முதுமலை புலிகள் காப்பகம்

கூடலூரில் இருந்து மைசூருக்கு செல்லும் இடைப் பட்ட பகுதியில் முதுமலை புலிகள் காப்பகம் உள்ளது. இக்காப்பகத்தின் வழியாக மைசூருக்கும், மசினகுடி வழியாக ஊட்டிக்கும் செல்ல சாலைகள் போடப்பட்டு உள்ளது. இந்த வழியாக செல்லும் பயணிகள் சாலை ஓரம் உலா வரும் வனவிலங்கு களை கண்டு ரசிப்பது வழக் கம். சில சமயங்களில் வன விலங்குகளுக்கு தொந்தரவு செய்யும் வகையில் சிலர் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் இரவு 9 மணி முதல் காலை 6 மணி வரை கூடலூர்– மைசூர் சாலையை வனத் துறையினர் மூடி வைத்துள்ளனர். இதனால் இரவு நேரங்களில் வாகன போக்குவரத்துக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

வாகனம் மோதி கடமான் பலி

இந்த நிலையில் கூடலூரில் இருந்து கார்குடி வழியாக முதுமலைக்கு செல்லும் சாலையில் தெப்பக்காடு அருகே அடையாளம் தெரியாத வாகனம் மோதி கடமான் ஒன்று பலியாகி கிடப்பதாக முதுமலை வனத்துறையினருக்கு தகவல் கிடைத்தது. இதையொட்டி முதுமலை வனத்துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர். சுமார் 15 வயதான ஆண் கடமான் உடலில் பலத்த காயத்துடன் இறந்து கிடந்தது. முதுமலை கால்நடை டாக்டர் கலைவாணன் பலியான கடமானின் உடலை பிரேத பரிசோதனை செய்தார்.

விசாரணை

*இது குறித்து வனத்துறை தரப்பில் கூறும் போது, அடையாளம் தெரியாத வாகனம் மோதி கடமான் இறந்திருப்பதாக கூறினர். தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது.*

## ***ஊட்டியில், கடும் உறைபனி: மலர் செடிகளை கருகாமல் இருக்க நடவடிக்கை***

*ஊட்டி, டிச.27–*
*ஊட்டியில் தற்போது கடும் உறை பனி கொட்டு வதால் மலர் செடிகள் கருகாமல் இருக்க காட்டு செடிகளை கொண்டு மூடி வைக்கும் பணி நடைபெற்று வருகிறது.*
*சீசன் காலங்கள்*
*ஊட்டிக்கு சீசன் காலங் களான ஏப்ரல், மே மாதம் லட்சகணக்கில் சுற்றுலா பயணிகள் வருகை தருகின்ற னர். இங்கு வரும் சுற்றுலா பயணி களை மகிழ்விக்க ஊட்டி அரசு பூங்காவில் மலர் கண்காட்சியும் மற்றும் ரோஜா பூங்காவில் ரோஜா கண்காட்சி யும் மே மாதம் நடத்தப்படு கிறது.*
*ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் கோடை சீசனை முன்னிட்டு கடந்த 20–ந் தேதி சால்வியா, டெல்பீனியம், பெட்டூனியா, மேரிகோல்டு, பிரெஞ்ச் மேரிகோல்டு உள்பட 150 ரகங்களை சேர்ந்த சுமார் 3 லட்சம் மலர்செடிகள் நடவு செய்யும் பணி தொடங்கி யது.*
*தொட்டி செடிகள்*
*மேலும் மலர்கண்காட்சியின் போது மலர் கோபுரங்கள் அமைக்கவும், மலர் மாடத்தில் பூந்தொட்டிகள் அடுக்கவும் சுமார் 15 ஆயிரம் பூந்தொட்டி களில் மலர் செடிகள் நடவு செய்யும் பணியும் நடைபெற்று வருகிறது.தற்போது ஊட்டியில் உறைபனிப்பொழிவு அதிகமாக உள்ளது. கடும் உறை பனியால் இந்த மலர் செடிகள் கருகாமல் இருக்க 'தாவே' எனப்படும் காட்டு செடிகளை கொண்டு மலர் செடிகள் மூடி வைத்து பாதுகாக்கப்படுகிறது.*
*இது தவிர மரவியல் பூங்கா உள்ளிட்ட தாவரவியல் பூங்காவின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் மலர்செடி களை உறை பனியில் கருகி விடாமல் பாதுகாக்கும் பணி யில் பூங்கா உதவி இயக்குனர் பிரகாசம், மேலாளர் ஜெய லட்சுமி மற்றும் பணியாளர்கள் ஈடுபட்டு உள்ளனர்.*